வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 05
03.05.2024 வெள்ளிக்கிழமை
இதழ் : 124
பக்கங்கள் : 12

மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

# ஐ.தே.க. - பெரமுன தேர்தலில் வெல்ல இந்தியாவின் ஆளும் கட்சி ஆதரவு?

## தனது பிரசார உத்திகளை பகிர்ந்தது



புதுடில்லி, மே 03

இந்தியத் தேர்தலில் தனது பிரசார உத்திகள் மற்றும் அனுபவங்கள் - அறிவை ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன கட்சியுடன் பகிர்ந்துள்ளது பாரதிய ஜனதா கட்சி (பா. ஜ. க.). இதன் மூலம் இலங்கையில் எதிர்வரும் நாட்களில் நடைபெறவுள்ள ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் இந்தக் கட்சிகளை கொண்ட கூட்டணி வெற்றிபெறவேண்டும் என்பதே இந்தியாவை ஆளும் கட்சியின் விருப்பம் என்பதை மறைமுகமாக உணர்த்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது. 11



# சமய முறைப்படி அடக்கம் செய்த எலும்புக்கூடே புங்குடுதீவில் மீட்பு!

யாழ்ப்பாணம், மே 03

புங்குடுதீவில் அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூடு சமய முறைப்படி அடக்கம் செய்யப்பட்டது என்பது தெரிய வந்துள்ளது.

புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தில் அரசினர் மருத்துவமனையை அண்மித்த பகுதியிலுள்ள சிவன் ஆலயத்தின் புனரமைப்பு பணிக்காக கிடங்கு வெட்டியபோது மனித எலும்புக்கூட்டின் எச்சம் கடந்த ஏப்ரல் 18ஆம் திகதி மீட்கப்பட்டது.

இது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸ் 11

# தமிழர் உரிமைக்கான போராட்டம் வன்முறையற்ற வழியில் தொடரும்

## வடக்கு வந்து சென்ற பின்னர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 03

தமிழர் உரிமைகளுக்கான போராட்டம் தொடரும். ஆனால், வன்முறையற்ற வழிகளில்..." - இவ்வாறு அண்மையில் வடக்குக்கு வந்து சென்ற ஜனாதிபதியின் ஆலோசகரும் நோர்வே முன்னாள் தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கை அரசு அதிகாரங்களைப் பகிரவேண்டும் என்றும் அவர் தனது எக்ஸ் தளத்தில் வலியுறுத்தியுள்ளார்.

அந்தப் பதிவில் அவர் வெளியிட்ட பதிவின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

தற்போது வடக்கு இலங்கை சமாதானத்தை அனுபவிப்பதுடன், அது 11

# இலங்கை - சீனா ஒப்பந்தங்கள் விரைவாக நடைமுறைக்கு வரும்

## சீன தூதுவர் - பிரதமர் சந்திப்பு

கொழும்பு, மே 03

இலங்கை - சீனா இடையேயான உடன்படிக்கைகளை விரைவாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

நேற்று பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகையில் நடைபெற்ற சந்திப்பில்,

இரு நாடுகளுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகளை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. கடந்த மார்ச் மாதம் பிரதமர் சீனாவுக்கு சென்றிருந்தபோதே இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

"புரிந்துணர்வு ஒப்பந்தங்களை நடை முறைப் படுத்துவது இலங்கைக்கும் 11

ஜனாதிபதித் தேர்தல்

# 2 திகதிகளை பரிசீலிக்கும் தேர்தல்கள் ஆணைக்குழு!

கொழும்பு, மே. 03

அரசியல் கட்சிகள் தேர்தலுக்கு தயாராகி வரும் பின்புலத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி குறித்து தேர்தல்கள் ஆணைக் குழு பரிசீலித்து வருகிறது.

செப்ரெம்பர் 28 அல் லது நவம்பர் 05 ஆகிய இரண்டு திகதிகள் தற் போது பரிசீலனை மட்டத்தில் உள்ளன. இந்த இரண்டு திகதிகளில் தேர்தலை நடத்த வேண்டுமென்றால் எதிர்வரும் ஜூலை மாத இறுதிக்குள் முதல்கட்ட அறிவிப்புகளை தேர்தல்கள் 11



# அரச நிறைவேற்று அதிகாரிகள் பணிப்புறக்கணிப்பு போராட்டம்

கொழும்பு, மே 03

நிதி அமைச்சுக்கு முன்பாக அரச நிறைவேற்று அதிகாரிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரச நிறைவேற்று அதிகாரிகள் இரண்டு நாள் சுகயீன விடுமுறை பணிப் புறக்கணிப்பை நேற்று ஆரம்பிததனர்.

சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட தொழில்சார் பிரச்னைகளுக்கு தீர்வு வழங்காமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரச பொறியியல் சேவை, விவசாயம், கல்வி, சுகாதாரம், அறிவியல், தகவல் தொழில்நுட்பம், திட்டமிடல், நில அளவை, கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட 18 துறைகளில் அரச 11

# பஸ் கட்டணத்தில் திருத்தம் இல்லை!

கொழும்பு, மே. 03

எரிபொருள் விலைத் திருத்தத்திற்கேற்ப பஸ் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளாதிருக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதன்படி எரிபொருளின் விலை குறைக்கப்பட்டுள்ள போதிலும் போக்குவரத்து கட்டணம் குறைக்கப்பட மாட்டாது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் 11

# ரூ. 1,700 வழங்க முடியாது!

## முதலாளிமார் சம்மேளனம் அறிவிப்பு

கொழும்பு, மே. 03

பெருந்தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1700 ரூபாய் வழங்குவது தொடர்பில் கடந்த புதன்கிழமை வெளியிடப்பட்டிருந்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், தம்மால் நாளாந்த சம்பளமாக 1700 ரூபாவை வழங்க முடியாதென பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் அறிவித்துள்ளது.

பெருந்தோட்ட கம்பனிகளுடன் எவ்விதமான தொடர்பாடல்களையும் மேற்கொள்ளாமல் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட் 11

# கணவர் சடலமாக மீட்பு; மனைவி தவறான முடிவு

வவுனியா, மே 03

கணவர் சந்தேகத்துக்கு இடமான முறையில் சடலமாக மீட்கப்பட்டதை பார்த்த மனைவியும் தவறான முடிவு எடுத்து தனது உயிரை மாய்த்துள்ளார்.

வவுனியா - நெடுங்கேணி - கீரிசுட்டானில் நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது, கீரிசுட்டானில் அரைக்கும் ஆலை ஒன்றை நடத்தி வந்தவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார். 11

உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

தெற்கில் மே தினப் பேரணிகள் மூலம் தமது பலத்தைக் காட்ட ஒவ்வொரு கட்சிகளும் தீவிரமாக உழைத்து வருவது பற்றி இந்தப் பத்தியில் முன்னரே தெரிவித்திருந்தேன்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள பிரதான மூன்று வேட்பாளர்களும் இந்த மே தினத்தையே தமது பலத்தை காட்டுவதற்கு பயன்படுத்துவர் என்ற எதிர்பார்ப்பு அனைத்துத் தரப்பிலும் இருந்தது.

மே தினம் என்பது தொழிலாளர்களுக்கான தினம். ஆனால், அதனை முதலாளித்துவ சிந்தனை உள்ள கட்சிகள் பெரும் எடுப்பில் கொண்டாடுவது இலங்கையில் பிரசித்தமானது.

ஒரு காலத்தில் மே தினப் பேரணிகள் என்றால் இடது சாரிக் கட்சிகளின் பேரணிகளே மிகப் பெரிய அளவில் நடக்கும். அவர்கள் மட்டுமே தொழிலாளர்களை பெரிதும் தமது கட்சிகளில் கொண்டிருப்பதும் பல தொழிற்சங்கங்களை கொண்டிருப்பதும் இதற்கு பிரதான காரணமாக இருக்ககலாம். அத்தகைய சிறப்புகளைக் கொண்டிருந்த இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி மட்டுமன்றி மிகப்பெரிய தொழிலாளர்களைக் கொண்டிருந்த சண்முகதாசனின் தொழிற்சங்கம் போன்றவை இப்போது இருக்கும் இடமே தெரிவதில்லை.

அவர்களின் வழியில் இப்போதும் தங்களை இடது சாரிகளாகக் காட்டிக்கொண்டு அரசியல்செய்யும் மக்கள் விடுதலை முன்னணி மட்டுமே இன்றும் உண்மையான தொழிலாளர் தினப் பேரணிகளை தொடர்ந்து நடத்திவருகின்றது.

அவர்களும்கூட நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து இந்தத் தடவை தமது மே தின பேரணிகளை பெரிய அளவில் நடத்திக் காட்டியிருக்கின்றனர். அது எதிர்பார்க்கப்பட்டதுதான். அவர்கள் மட்டுமே, கட்சியாக ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் தமது மே தினப் பேரணியை நடத்தினாலும், அது தேர்தலில் வாக்குகளாக மாறுமா என்பது தெரியவில்லை.

நேற்று முன்தினம் நடந்த பேரணிகளில் எதிர்பார்க்காத ஒன்று, பொதுஜன பெரமுனவின் பேரணிதான்.

ஏற்கனவே, ஜே. வி. பியைத் தவிர்த்து, ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் தத்தமது பலத்தை இந்த மே தினத்தில் காட்டுவதற்கு திட்டமிட்டிருந்தபோதிலும் அவர்கள் இருவருமே திட்டமிட்டவாறு மக்களைத் திரட்ட முடியவில்லை என்பது இப்போது தெரிய வந்திருக்கின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி அறுபதாயிரம் மக்களை திரட்டவும் ஐக்கிய மக்கள் சக்தி அதைவிட அதிகமாகத் திரட்டவும் திட்டமிட்டிருந்தபோதிலும் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊர்வலத்தில் அண்ணளவாக இருபத்தி மூவாயிரம் மக்களும் ஐக்கிய தேசியக்கட்சியின் ஊர்வலத்தில் பன்னிரண்டாயிரம் மக்களுமே கலந்துகொண்டனர். ஆனால், யாரும் எதிர்பாராத நிகழ்வாக பொதுஜன பெரமுனவின் மே தினக் கூட்டத்தில் அண்ணளவாக இருபத்தி ஓராயிரம் பேர் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றைய இரண்டு கட்சிகளின் ஊர்வலம் மற்றும் கூட்டம் என்பன கொழும்பில் குறுகிய வீதிகளில் நடைபெற பெரமுனவின் கூட்டம் திறந்த மைதானத்தில் நடைபெற்றிருக்கின்றது.

ஜே. வி. பி. இந்தத் தடவை நான்கு இடங்களில் கூட்டங்களை நடத்திய அதேவேளை, அவர்களின் கொழும்பு பேரணியில் வழக்கம்போலவே அதிகளவானவர்கள் கலந்து கொண்டனர். சுமார் முப்பத்தியெட்டு ஆயிரம் பேர் அவர்களின் கொழும்பு பேரணியில் கலந்துகொண்டனராம்.

தெற்கில்தான் அப்படி ஏட்டிக்கு போட்டியாக பேரணிகள் நடந்தன என்றால், வடக்கிலும் இந்தத் தடவை அநேகமாக எல்லாக் கட்சிகளுமே மே தினத்தை ஒட்டி கூட்டங்கள் பேரணிகளை நடத்தியிருக்கின்றன. வழக்கமாகவே தமிழ் அரசின் கிளிநொச்சி கிளையினர் தமிழ்த் தேசிய மே தினம் என்ற பெயரில் மே தினத்தை கொண்டாடி வந்தாலும், இந்த ஆண்டு அவர்களின் மே தினம் பலரின் கவனத்தையும் பெற்றிருந்தது. தமிழ் அரசின் தலைவர் பதவிக்கான போட்டியில் கட்சி இரண்டுபட்டு நிற்பதால், அதன் ஓர் அணியினர் நடத்திய இந்த மே தின ஊர்வலத்தை மிக எழுச்சியுடன் நடத்துவதற்கு ஒழுங்கு செய்திருந்ததோடு, அதில் வெற்றியும் பெற்றிருக்கின்றனர் எனலாம். இதே வேளை, எந்தவித முன் ஆயத்தமும் இன்றி, அதாவது ஆரவாரமின்றி ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி என்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மே தின கூட்டத்தை மானிப்பாயில் நடத்தியபோதிலும், பெருந் தொகையானவர்களின் பங்கு பற்றுதலுடன் சிறப்பாக நடத்தி முடித்திருக்கின்றனர். இவை தவிர, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் வவுனியாவிலும், சமத்துவக் கட்சி கிளிநொச்சியிலும், மார்க்சிய லெனினிச கம்யூனிஸ்ட் கட்சி வவுனியாவிலும் தத்தமது மே தின பேரணிகளையும் தனித்தனியே நடத்திக் காட்டியிருக்கின்றனர்.

இந்த மேதினக் கூட்டங்களில் தலைவர்கள் விடுத்த அறிவிப்புகள் மிகவும் சுவாரஸ்யமானவை. அவைபற்றி நாளை பார்ப்போம்.

- ஊர்க்குருவி.

## அளம்பில் துயிலும் இல்ல காணியை அளவிடும் முயற்சி எதிர்ப்பால் நிறுத்தம்!

முல்லைத்தீவு, மே 03

அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல காணியை 23 ஆவது சிங்க ரெஜிமென்ட் இராணுவத்தினருக்கு சுவீகரிக்க எடுக்கப்பட்ட முயற்சி காணி உரிமையாளர்கள் மற்றும் அப்பகுதி மக்களால் தடுக்கப்பட்டது.

அளம்பில் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள காணியில் ஒரு பகுதியில் இராணுவ முகாம் அமைந்துள்ளது. அந்தக் காணியை இராணுவத்துக்கு சுவீகரிப்பதற்காக நேற்றைய தினம் நில அளவையாளர்கள் வருகை தந்தனர்.

இதன்போது, மக்களின் எதிர்ப்பால் காணியை அளவிடும் முயற்சி நிறுத்தப்பட்டது.

இதேவேளை, மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள காணியிலுள்ள படைகளை வெளியேறுமாறு வலியுறுத்த கடந்த காலங்கலில் உண்ணாவிரதப் போராட்டமும் நடைபெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

## உள்ளூர் உற்பத்திகளுக்கு ஏற்றுமதி தர சான்றிதழை யாழில் பெறமுடியும்

யாழ்ப்பாணம், மே 03

உள்ளூர் உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு தரச் சான்றிதழை வழங்கும் நிறுவனம் யாழ்ப்பாணத்தில் நேற்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

“கொன்றோல் யூனியன்” (CONTROL UNION) என்ற நிறுவனம் யாழ்ப்பாணம் - செட்டித்தெரு - இல.40 இல் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனம் தொடர்பில் யாழ்ப்பாண வர்த்தக சங்க தலைவர் இ. ஜெயசேகரம் கருத்துத் தெரிவிக்கையில்

வட மாகாணத்திலுள்ள உற்பத்தியாளர்கள் விவசாயம், உணவு உற்பத்தி போன்ற பல வகையான உற்பத்திகளுக்கான உற்பத்தி தரச் சான்றிதழை வழங்குவதற்கு இந்த நிறுவனம் தயாராக வுள்ளது.

உற்பத்தியாளர்கள் ஏற்றுமதிக்கான தரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கான ஆலோசனைகளையும் தரச் சான்றிதழ்களுக்கான ஆய்வுகளை செய்து வழங்குவார்கள். ஏற்கனவே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருப்பவர்களும் இந்த நிறுவனத்தின் தரச் சான்றிதழைப் பயன்படுத்தி தரத்தை உயர்த்தி பொருட்களை ஏற்றுமதி செய்யமுடியும்.

ஏற்றுமதி செய்யப்படுகின்ற பொருட்களுக்கான தரச் சான்றிதழ்களை பெற்று அனுப்புகின்றபோது குறித்த உற்பத்தி பொருட்களை தங்கு தடையின்றி தொடர்ந்தும் அனுப்பக்கூடியதாக இருக்கும்.

வடக்கு மாகாணத்தில் இருந்து ஏற்கனவே பல நிறுவனங்கள் இந்தத் தரச் சான்றிதழ்களை கொழும்பு சென்றே பெற்று பொருட்களை ஏற்றுமதி செய்து கொண்டிருக்கும் நிலையில் இந்த நிறுவனம் இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது ஏனைய உற்பத்தியாளர்களும் இந்த நிறுவனத்தைப் பயன்படுத்தி தரச் சான்றிதழ்களைப் பெற்று வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியை பெற்றுக் கொள்ள முடியும் எனவே உள்ளூர் உற்பத்தியாளர்கள் இதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் - என்றார்.

இந்த நிகழ்வில் இந் நிறுவனத்தின் முகாமத்துவ பணிப்பாளர் றொசான் ரணவக்க, வர்த்தக முகாமையாளர் சுனர விக்கிரமாரச்சி மற்றும் நிறுவன அதிகாரிகள், யாழ்ப்பாண வர்த்தக சங்க தலைவர் இ, ஜெயசேகரன்,மாகாண கைத்தொழில் அபிவிருத்தி பணிப்பாளர் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ஐ)

## ஐஸ் போதையுடன் இளைஞர் கைது!

வவுனியா, மே 03

50 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் வவுனியா - செட்டிக்குளத்தில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே 36 வயதான இளைஞர் கைது செய்யப்பட்டார்.

கைப்பற்ற போதைப் பொருளின் பெறுமதி கிட்டத்தட்ட 15 இலட்சம் ரூபாய் என்றும் கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்படும்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## கட்டைக்காட்டில் மூவர் கைது!


வடமராட்சி, மே 03

ஒளிபாய்ச்சி - சுருக்கு வலையை பயன்படுத்தி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் 3 சந்தேக நபர்களை கடற்படை கைது செய்துள்ளது.

நேற்றைய தினம் வெற்றிலைக்கேணி கடற்படையினர் வடமராட்சி கிழக்கு - கட்டைக்காட்டில் நடத்திய திடீர் சுற்றிவளைப்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதான சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம் நீரியல் வளத் திணைக்கள அதிகாரி பணிமனையில் ஒப்படைக்கப் பட்டுள்ளனர். (ஐ)

## நோர்வே தூதுவர் அநுரவை சந்தித்தார்!



கொழும்பு, மே 03

நோர்வே தூதுவர் மே-எலின் ஸ்டெனர் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க ஆகியோருக்கிடையிலான சந்திப்பு மக்கள் விடுதலை முன்னணியின் பணிமனையில் நேற்று நடைபெற்றது.

இந்த சந்திப்பில் நோர்வே தூதரகத்தின் இரண்டாவது செயலாளரான ஜோன் பிஜேர்கெம், தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது, நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி தொடர்பிலும் அரசியல் ரீதியிலான பிரச்னைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இந்நிலையில் நோர்வே அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்படவுள்ள உதவிகள் மற்றும் இரு நாடுகளுக்கிடையிலான உறவை வலுப்படுத்தலின் அவசியம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
03.05.2024 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம், சித்திரை 20

"அஞ்சுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மாவை கூறுவது உண்மையாயின்!

"நாங்கள் தொழிலாளர்களுக்காக மட்டுமல்ல, நிலத்தைப் பாதுகாப்பதற்காகவும் ஒன்று கூடியிருக்கின்றோம்" - என்று மாவை சேனாதிராசா கூறியிருக்கின்றார். கிளிநொச்சியில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியிருக்கின்றார். மாவை கூறுவது உண்மைதானா? தமிழர் நிலத்தை, தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பாதுகாப்பற்காக ஒன்றுகூடும் - செயலாற்றும் நோக்கம் உண்மையிலேயே தமிழ் அரசுக் கட்சியிடம் இருந்தால் ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்கான மூலோபாயம் தொடர்பில் தமிழ் அரசுக் கட்சி அதன் உறுதியான நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான தென்னிலங்கையின் நகர்வுகள் தீவிர மடைந்திருக்கின்றன. இந்த நிலையில் தமிழ்த் தேசியத்தை முன்னிலைப் படுத்துவதாகக் கூறிக்கொள்ளும் கட்சிகள் ஓர் உறுதியான நிலைப்பாட்டுக்கு வரவேண்டும். இந்த விடயத்தில் இனியும் தாமதிக்கக்கூடாது. குத்து விளக்கு சின்னத்திலுள்ள ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி கொள்கை அடிப்படையில் அதன் நிலைப்பாட்டை அறிவித்திருக்கின்றது. இதே போன்று, விக்னேஸ்வரனும் அறிவித்திருக்கின்றார்.

பிரதான கட்சியும் கடந்த பதினைந்து வருடகால தமிழர் தீர்மானங்களில் பிரதான பங்குவகித்த இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பங்களிப்பு அவசியமென்றே அனைத்துக் கட்சிகளும் கருதுகின்றன. தமிழ் அரசுக் கட்சி உள்ளக நெருக்கடிக்குள் சிக்கியிருந்தாலும்கூட தமிழ் அரசுக் கட்சியின் பெரும்பாலானவர்கள் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரித்துப் பேசிவருகின்றனர். இவ்வாறானதொரு நிலையில் தமிழ் அரசு கட்சியின் தலைவர் என்னும் வகையில் மாவை சேனாதிராசா தீர்க்கமான முடிவுகளை அறிவிக்க வேண்டும். தொடர்ந்தும் மதில் மேல் என்றவாறான அணுகுமுறையில் இருப்பது அவரது தலைமைக்கு அழகல்ல.

இன்றைய நிலையில், தென்னிலங்கை அரசியல் பரப்பில் தெரியும் பிரதான வேட்பாளர்கள் எவருமே தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்னை தொடர்பில் உறுதியான அறிவித்தல்களை மேற்கொள்ளவில்லை. எவருமே, தமிழ் மக்களுக்கு ஒரு தேசிய இனப் பிரச்னை இருக்கின்றது - அதற்கான தீர்வை காண்பதே முதன்மையானது - அதற்கான ஆணையை சிங்கள மக்களிடம் கோர வேண்டும் - என்னும் அடிப்படையில் அவர்கள் எவருமே பேசவில்லை. இந்த நிலையில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி எந்த அடிப்படையில் தென்னிலங்கை வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிக்குமாறு கூறப்போகின்றது? இதற்கு மாவையின் பதில் என்ன ?

தேர்தல் வரும்போது பார்த்துக் கொள்வோம் என்று கூறினால் - அதுவோர் ஆளுமையற்ற நிலைப்பாடு. தமிழ் மக்களின் பிரதான கட்சியொன்று அவ்வாறு கூற முடியாது.

தென்னிலங்கை வேட்பளார்கள் மே தினக் கூட்டங்களில் சில கருத்துகளை முன்வைத்திருக்கின்றனர். அவ்வாறான வாக்குறுதிகள் பலவற்றை தமிழ் மக்கள் ஏற்கனவே கண்டுவிட்டனர். போதியளவு ஏமாந்துவிட்டனர். இனியும் ஏமாறுமாறு எந்தவொரு கட்சியும் கூற முடியாது. அதற்கான உரித்தும் கட்சிகளுக்கில்லை. இந்த நிலையில், தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை ஆதரிக்க வேண்டிய - அதன் மூலம் தமிழ் மக்களின் பிரச்னையை இலங்கையின் ஜனநாயக முறைமைக்குள்ளால் வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பாக இந்தத் தேர்தலை கையாள வேண்டும். இது தொடர்பில் தமிழ் அரசுக் கட்சி அதன் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும். அந்த நிலைப்பாடானது தமிழ் அரசுக் கட்சி தென்னிலங்கையுடன் நிற்கப் போகின்றதா அல்லது தமிழ் மக்களுடன் நிற்கப் போகின்றதா - என்பதை நிரூபிப்பதாக இருக்க வேண்டும்.

# தமிழரின் அரசியல் கொள்கைக்கு தமிழ் பொது வேட்பாளர் அவசியம்!

## சிறீதரன் எம். பி. வலியுறுத்து

கிளிநொச்சி, மே 03

தமிழ் மக்களின் அரசியல் கொள்கைக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் தேவை என்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மே தினக் கூடடத்தில் உரையாற்றும் போது அவர் இதனை தெரிவித்தார்.

நாட்டில் காலத்துக்குக் காலம் ஜனாதிபதித் தேர்தலில் பல வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்கிய போதும் சிலர் வெற்றி பெற்றார்கள். ஆனால், தமிழ் மக்களாகிய எமக்கு ஒன்றும் கிடைக்கவில்லை.

தமிழ் மக்களின் அரசியல் கொள்கைக்கு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் தேவை.

இணைந்த வடக்கு, கிழக்கிலே சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வை வலியுறுத்துவதற்கு, தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

# காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளை அரசோ, கட்சிகளோ சிந்திக்கவில்லை!

## ஐங்கரநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 03

காலநிலை மாற்றம் சகல தொழில்துறைகளையும் மிக மோசமாகப் பாதித்துக் கொண்டிருக்கிறது. தொழிலாளிகள் தங்கள் தொழில் வாய்ப்புகளை இழந்து வீதிக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், இவை பற்றி அரசாங்கமோ, அரசியல் கட்சிகளோ சிந்திப்பதாக இல்லை - என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

மேலும், உழைப்பாளர் தினப் பொதுக் கூட்டங்கள் வெற்று அரசியல் கோஷங்களாலேயே நிரம்பி வழிந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலை மாறவேண்டும். அரசியல் விவாதங்களில் காலநிலை மாற்றம், சுற்றுச் சூழல் பிரச்னைகள் முன்னுரிமை பெறவேண்டும் - என்றார்.

நேற்று முன்தினம் கொக்குவிலில் நடந்த தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் மே தின நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# பொலநறுவையை சேர்ந்த 6 ஆயிரம் பேருக்கு காணிகள்!

## லொஹான் ரத்வத்த தெரிவிப்பு

கொழும்பு, மே 03

உறுமய திட்டத்தின் கீழ் பொலநறுவை மாவட்டத்தில் மேலும் 6 ஆயிரம் பேருக்கு இந்த வார இறுதியில் காணி உறுதிகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


"விவசாயத்துறை சார் பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் அதனுடன் இணைந்து செயற்படும் மகாவலி அபிவிருத்தி அதிகார சபையும் இலங்கையின் பொருளாதாரத்துக்கு பெரும் பங்களிப்பை வழங்குகின்றது. இதன்படி தேயிலை, இறப்பர் மற்றும் தேங்காய் உட்பட சிறு ஏற்றுமதிப் பயிர்கள் உள்ளிட்ட அனைத்துவித விவசாய உற்பத்திகளும் இந்த அமைச்சின் கீழ் உள்ளன.

மகாவலி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணி தொடர்பில் சிக்கல்கள் காணப்படுகின்றன. உறுமய திட்டத்தை அமுல்படுத்துவதற்கு இணையாக மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான காணிகள் தொடர்பான பிரச்னைகளைத் தீர்ப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தின் அடிப்படையில் காணி உரிமைகள் இல்லாத மக்களுக்கு முழு உரிமையுடைய காணி உறுதிகளை வழங்கும் உறுமய வேலைத்திட்டம் மிக முக்கியமான வேலைத்திட்டம் என்பதைக் கூற வேண்டும். இதன் கீழ், சுமார் 25 ஆயிரம் காணி உறுதிகள் வழங்கும் பணிகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன.

பொலநறுவை மாவட்டத்தில் மேலும் 6000 பேருக்கு இந்த வார இறுதியில் காணி உறுதிகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மகாவலி அதிகார சபைக்கு சொந்தமான காணிகளில் சட்ட விரோத செயற்பாடுகளை மேற்கொள்ள இடமளிக்கப்பட மாட்டாது - என்றார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகாசி - 03 வியாழக்கிழமை
குரோதி வருடம் - சித்திரை 20
நல்ல நேரம் : 09.30 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.30
திதி : தசமி



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள்.

**இடபம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக்கூர்ந்து மகிழ்வீர்கள். விருந்தினர் வருகையால் வீடுகளைக்கட்டும். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர் அவர்கள். சாதிக்கும் நாள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். உத்தியோகத்தில் இழந்த உரிமையை திரும்ப பெறுவீர்கள். திட்டங்கள் நிறைவேறும் நாள்.

**கடகம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. உத்தியோகத்தில் சின்னச் சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டி இருக்கும். போராட்டமான நாள்.

**சிம்மம்**
கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்துபோகும். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். மேலதிகாரி மதிப்பார். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கன்னி**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புதுயுக்திகளை கையாளுவீர்கள். அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். தொட்டது துலங்கும் நாள்.

**துலாம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். கனவு நனவாகும் நாள்.

**விருட்சிகம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**தனுசு**
திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களை தீட்டுவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். நவீன மின்னணு சாதனங்களை வாங்குவீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கும்பம்**
ராசிக்குள்சந்திரன்நீடிப்பதால்வேலைச்சுமையால் உடல் அசதி மனச்சோர்வு வந்து நீங்கும். சக ஊழியர்களுடன் பனிப்போர் வந்து நீங்கும். வளைந்து கொடுத்துச் செல்ல வேண்டிய நாள்.

**மீனம்**
குடும்பத்தை பற்றிய கவலைகள் வந்து நீங்கும். சக ஊழியர்களால் பிரச்னைகள் வந்து விளக்கம். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். கவனம்தேவைப்படும் நாள்.

# பா. ஜ. கவின் தமிழ்நாடு தலைமை மாறவேண்டும்

## சுப்பிரமணியன் சுவாமி

சென்னை, மே 03

பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு தலைமையில் மாற்றம் வரவேண்டும் - அந்தக் கட்சியின் மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமி கூறியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடமி கருத்துரைத்த அவர் மேலும் கூறியவை வருமாறு,

பாரதிய ஜனதாவுக்கு தனிப் பெரும்பான்மை கிடைக்கும் என்று நம்புகிறேன். கடந்த முறை கிடைத்த 300 தொகுதிகளில் இருந்து 25 ஆசனங்கள் குறைவாக - 275 ஆசனங்கள் கிடைக்கும் என எதிர்ப்பார்க்கிறேன். தமிழ்நாட்டில் நெல்லை தொகுதியில் போட்டியிட்ட நயினார் நாகேந்திரன் வெற்றி பெறலாம். மற்ற வேட்பாளர்கள் பற்றித் தெரியாது. தமிழ்நாட்டில் ஓர் ஆசனத்துக்கு மேல் கிடைக்குமா? என்பதை சொல்ல முடியாது.

யார் பிரதமராக இருப்பார்? என கட்சிக்குள் தேர்தல்'நடக்கவில்லை. வேட்பாளர்கள் வென்று வந்த பின்தான் பிரதமர் யார்? என்பதை முடிவு செய்ய வேண்டும். கட்சி எம். பிக்கள்தான் அதை முடிவு செய்ய வேண்டும். பாரதிய ஜனதா எம்.பிக்கள் என்னை பிரதமராக இருக்க சொன்னால் ஏற்பேன். மோடிக்கு 2 முறை வாய்ப்பு கிடைத்துவிட்டது. இந்த முறை வேறு ஒருவருக்கு கிடைக்க வேண்டும் என்பது என்னுடைய எண்ணம்.

தமிழ்நாடு பா.ஜனதா தலைமையில் மாற்றம் வரவேண்டும். நாட்டில் சரியான எதிர்க்கட்சி தலைவர் கிடையாது. எதிர்க் கட்சி தலைவராக வரக்கூடிய தகுதி மம்தா பனர்ஜிக்குதான் உள்ளது - என்றார்.

(ஐ)

# தமிழ்நாடு சட்ட சபை ஜூன் 2ஆம் வாரம் கூடும்!

சென்னை, மே 03

தமிழ்நாடு சட்ட சபை ஜூன் 2ஆவது வாரத்தில் ஆரம்பமாகும் என்று அறிய வருகின்றது.

நாடு முழுவதும் பாராளுமன்ற தேர்தல் கடந்த ஏப்ரல் 19ஆம் திகதி ஆரம்பித்து 7 கட்டங்களாக நடைபெற்று வருகிறது. ஜூன் 1ஆம் திகதி இறுதிக் கட்ட வாக்குப் பதிவு நடைபெறும். தொடர்ந்து ஜூன் 4ஆம் திகதி தேர்தல் முடிவுகள் வெளியாகும்.

இந்திய பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியானதும் ஜூன் 2ஆவது வாரத்தில் சட்ட சபை கூட்டத்தொடர் கூட வாய்ப்பு உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சபாநாயகர் தலைமையில் அலுவல் ஆய்வுக்குழு ஜூன் 2ஆவது வாரம் கூடி கூட்டத் தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து முடிவு செய்யப்படவுள்ளது. ஜூன் 2ஆவது வாரத்தில் தொடங்கும் சட்டசபை கூட்டத் தொடர் சுமார் 25 நாட்களுக்கு மேல் நடைபெறும் என எதிர் பார்க்கப்படுகிறது.

(ஐ)

# "கர்நாடக அரசை முதலமைச்சர் வற்புறுத்துவதில்லை"



சென்னை, மே 03

காவிரி விவகாரம் குறித்து தமிழக முதலமைச்சரும், நீர் வளத்துறை அமைச்சரும் கர்நாடக அரசை வற்புறுத்துவதே கிடையாது என்று தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி. கே. வாசன் விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களிடம் அவர் கூறியவை வருமாறு,

"தமிழகத்துக்குத் தண்ணீர் கொடுக்க முடியாது என காங்கிரஸ் தலைமையிலான கர்நாடக அரசின் முதலமைச்சரும் துணை முதலமைச்சரும் அடிக்கடி கூறி வருவது, தமிழக விவசாயிகளின் வெந்த புண்ணில் வேலை பாய்ச்சுவது போல் உள்ளது.

தமிழகத்தில் கூட்டணி அரசியல் மற்றும் வாக்கு வங்கி அரசியலுக்காக தி. மு. க. அரசின் முதலமைச்சரும், நீர்வளத்துறை அமைச்சரும் காவிரி விவகாரம் குறித்து கர்நாடக அரசை வற்புறுத்துவதே கிடையாது - என்றார்.

(ஐ)

# அஜித் அரசியலுக்கு வந்தால் வரவேற்போம்

சென்னை, மே 03

நல்லது செய்வதற்கான பரந்த களம் என்பது அரசியல்தான். அப்படிப்பட்ட களத்துக்கு அஜித்குமார் வந்தால் கண்டிப்பாக நாங்கள் வரவேற்போம் - என்று அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் தெரிவித்துள்ளார்.

சென்னையில் அ. தி. மு. க. சார்பில் மோர் பந்தலை திறந்து வைத்த பின்னர் உரையாற்றிய ஜெயக்குமார்,

பொதுவாக அஜித்துக்கு எப்போதும் ஒரு சிறப்பான நன்றியை நான் சொல்வேன். அவர் ஒரு தைரியசாலி - கோழைகளை எனக்கு பிடிக்காது. தைரியசாலியைதான் பிடிக்கும். விடாமுயற்சி திரைப்படம் வெற்றி பெறுவதற்கு என்னுடைய வாழ்த்துகள் என்று கூறினார்.

இதற்கிடையில் செய்தியாளர் ஒருவர் நடிகர் அஜித் அரசியலுக்கு வந்தால் அதை விரும்புவீர்களா? என்று கேள்வி கேட்டார். அதற்கு பதில் அளித்த ஜெயக்குமார், "நல்லது செய்வதற்கான பரந்த களம் என்பது அரசியல்தான். அப்படிப்பட்ட களத்துக்கு அஜித்குமார் வந்தால் கண்டிப்பாக நாங்கள் வரவேற்போம்"" என்றார்.

(ஐ)

காவிரி தண்ணீர் விவகாரம்

# தமிழக அரசின் பின்னால் அனைவரும் வரவேண்டும்

## வைகோ அழைப்பு

சென்னை, மே 03

காவிரி நதி நீர் விவகாரத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும் தமிழக அரசின் பின்னால் நிற்க வேண்டும் - - என்று ம. தி. மு. க. பொதுச் செயலர் வைகோ தெரிவித்துள்ளார்.

"காவிரி விவகாரத்தில் கர்நாடக அரசின் போக்கை தடுத்து நிறுத்துவதற்காக தமிழக அரசும் எதிர்கட்சிகளும் சேர்ந்து போராட வேண்டும். காவிரி பிரச்னையில் ஆபத்து நம் தலைக்கு மேலே தொங்கிக் கொண்டிருக்கிறது.

தமிழகத்தின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் திராவிட மொடல் ஆட்சி நடத்தும் முத



லமைச்சரும், தமிழக அரசும் பிரச்னைக்கு இடம் கொடுக்காமல் தடுத்து நிறுத்துவார்கள் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறோம். அப்படி ஓர் அழைப்பு விடுக்கப்பட்டால், அனைத்து அரசியல் கட்சிகளும் தமிழக அரசின் பின்னால் நிற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்னைக்கு தீர்வு காணாமல் அரசு இனமுரண்பாட்டை வளர்க்கிறது

## சந்திரகுமார் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, மே 03

**யுத்தம் முடிந்து 15 ஆண்டுகள் கடந்த பின்னும் இனப் பிரச்னைக்கான தீர்வைக் காண்பதற்கு எந்த முயற்சிகளும் உருப்படியாக முன்னெடுக்கப்படவில்லை. பதிலாக இன முரண்பாட்டை வளர்க்கும் விதமாக நில ஆக்கிரமிப்பு, பௌத்த விரிவாக்கத்துக்காக விகாரைகளைக் கட்டுதல் என்றே அரசாங்கம் செயல்படுகிறது.**

- இவ்வாறு சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு. சந்திரகுமார் தனது மே தின உரையில் தெரிவித்துள்ளார்.

மேலும், இந்த நாட்டுக்குத் தேவையாக இருப்பது தொழிற்சாலைகளே தவிர, ஆக்கிரமிப்பு விகாரைகளல்ல. வேலை வாய்ப்பில்லாமல் இளைய தலைமுறையினர் தவிக்கின்றனர். உற்பத்தியில்லாமல், பொருளாதார வளர்ச்சியில்லாமல் நாடு கடனில் மூழ்குகிறது.

கிளிநொச்சி பசுமை பூங்காவில் நடந்த சமத்துவ மக்கள் கட்சியின் மே தின கூட்டத்தில் பேசிய அவர்,

இடர் நிறைந்த வரலாற்று தருணத்திலேயே இந்த மே நாளும் வந்திருக்கிறது இன ஒடுக்குமுறையும் பொருளாதாரப் பிரச்னையும் இணைந்து இரட்டைத்தாக்குதலை நம் மீது மோசமாக நடத்துகிறது. இரண்டையும் முறியடித்து விடுதலையடைய வேண்டிய வரலாற்றுக் கட்டாயத்தில் நாம் உள்ளோம்.

இனப்பிரச்னைக்கும் பொருளாதாரப் பிரச்னைக்கும் தீர்வைக் காண வேண்டிய அரசும் ஆட்சியாளர்களும் அதை வைத்தே பிழைத்துக் கொண்டிருக்கும் போக்கே தொடருகிறது. அரசாங்கத்தையும் ஆட்சியாளர்களையும் எதிர்ப்பதாகக் காட்டிக் கொள்வோரும் மறைமுகமாக இனவாதத்துக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் ஒத்துழைக்கிறார்கள். ஆகவே இரண்டு தரப்பும் மக்களுக்கு விரோதமாகவே செயற்படுகின்றன. இவற்றை நாம் முறியடிக்க வேண்டும். அதற்காக விழிப்படைய வேண்டும். ஒன்றிணைந்து பலமடைய வேண்டும்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியினால் தினமும் ஆயிரக்கணக்கில் ஆற்றலுடையோர் நாட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். இதனால் உழைப்புச் சக்தியும் அறிவாற்றலும் நிறைந்த மனித வளம் நாட்டை விட்டுச் செல்கிறது. அந்த வளத்தை அப்படியே பிற நாடுகள் பெற்றுக் கொள்கின்றன. இந்த நிலை தொடர்ந்தால், மேலும் நமது நாடு பின்னடையும். உடலிலிருந்து குருதி வடிந்தோடித் தீர்ந்து விட்டால் உயிராபத்தைச் சந்திக்க வேண்டியிருப்பதைப்போலவே இந்த மனித வள இழப்பு நாட்டின் வளர்ச்சிக்கும் எதிர்காலத்துக்கும் ஆபத்தை விளைக்கக் கூடியது. ஆனால், இனவாதிகள் இதைப் பற்றியெல்லாம் சிந்திக்கத் தயாரில்லை.

இன்று நாட்டின் வளங்களையெல்லாம் அந்நிய சக்திகள் கொள்ளையடிக்க முற்படுகின்றன. ஒவ்வொரு பிரதேசங்களிலும் வளக் கொள்ளைக்கு அரசாங்கமே துணைநிற்கிறது. அரசாங்கத்தோடு இணைந்து நிற்கும் சக்திகள் மக்களுக்கு விரோதமான முறையில் வளக்கொள்ளைக்குத் துணைபோகின்றன. அனைத்து நெருக்கடிகளுக்கும் மத்தியில் வாழ்கின்ற மக்களே இதற்கும் எதிராகப் போராட வேண்டியுள்ளது - என்றார்.

(ஐ)

# வெப்பமான வானிலை 2 வாரங்களுக்கு நீடிக்கும்

கொழும்பு, மே. 03

நிலவும் வெப்பமான வானிலை மேலும் 2 வாரங்களுக்கு நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் பருவப்பெயர்ச்சி மழையும் எதிர்வரும் 2 வாரங்களுக்கு மாத்திரமே பெய்யும் என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

(அ)

# எல்ல பகுதியில் எந்நேரத்திலும் பாரிய மண் சரிவு ஏற்படலாம்!

கொழும்பு, மே. 03

மழையுடனான காலப்பகுதியில் பதுளை - எல்ல - கரந்த கொல்ல பகுதியில் எந்தவொரு நேரத்திலும் பாரிய மண்சரிவு ஏற்படக்கூடிய அபாயம் நிலவுவதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை எல்ல - கரந்த கொல்ல பகுதிகளில் ஏற்பட்டுள்ள மண்சரிவு அபாயம் உமா ஓயா பல்நோக்குத் திட்டத்தின் விளைவா? இல்லையா என்பதை கண்டறிவதற்காக தொழில்நுட்ப உபகரணங்களை நிறுவ தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட சிரேஷ்ட புவியியலாளர்கள் குழுவொன்று, எல்ல கரந்தகொல்ல மற்றும் மலித்த கொல்ல பகுதிகளை நேற்று முன்தினம் ஆய்வு செய்தது.

எல்ல கரந்தகொல்ல மற்றும் மலித்தகொல்ல பகுதிகளில் ஏற்பட்டுள்ள மண்சரிவு அபாயம் குறித்து கடந்த 26ஆம் திகதி வெளிப்படுத்தப்பட்டது.

இதேவேளை, உமாஓயா பல்நோக்கு திட்டத்தினால் இந்த மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளதாக அந்த பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அதன்படி கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் சிறப்புக் குழுவினால் அங்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அதன் பணிப்பாளர் நாயகம் ஆசிரி கருணாவர்தன, குறித்த மண்சரிவு அபாயம் தொடர்பில் கவனம் செலுத்தி வருவதாக தெரிவித்தார்.

இந்த பகுதிகளில் பொருத்தப்படும் தொழில்நுட்ப கருவிகளின் அடிப்படையில் விஞ்ஞானபூர்வமாக உறுதிப்படுத்த முடியும் என அவர் குறிப்பிட்டார்.

# இரண்டரை மாத குழந்தையின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு!

## கற்பிட்டியில் தாய் கைது

கொழும்பு, மே. 03

கற்பிட்டி, கந்தகுடாவ பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றுக்குள் அருகில் உள்ள கிணற்றிலிருந்து நேற்று அதிகாலை இரண்டரை மாத குழந்தையின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

மொஹமட் பாத்திமா என்ற இரண்டரை மாதக் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் உயிரிழந்த குழந்தையின் தாய் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கற்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# மெனிக்கின்ன வைத்தியசாலையில் மோதல் சிற்றூழியர்கள் 3 பேர் தற்காலிக பணி நீக்கம்

கொழும்பு, மே. 03

மெனிக்ஹின்ன வைத்தியசாலையில் இடம்பெற்ற மோதல் தொடர்பில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மூன்று சிற்றூழியர்களை பணி இடைநிறுத்தம் செய்ய மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மாகாண சுகாதார அமைச்சினால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் விசாரணை அறிக்கைகள் கிடைக்கும் வரை அவர்களினது சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நிஹால் வீரசூரிய தெரிவித்தார்.

மெனிக்ஹின்ன வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி உள்ளிட்ட ஊழியர்கள் வைத்தியசாலை வளாகத்தில் புத்தாண்டு கொண்டாட்டத்தை நடத்துவதற்கு மாகாண சுகாதார அதிகாரிகளிடம் முறையான அனுமதியைப் பெறவில்லை என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மெனிக்ஹின்ன பொலிஸாரால் கைது செய்யப்பட்ட வைத்தியசாலை ஊழியர்கள் மூவரையும் தெல்தெனிய நீதவான் தலா இரண்டு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவித்துள்ளார்.

மோதல் தொடர்பில் கைது செய்யப்பட்ட சிற்றூழியர்கள் மூவரும் கண்டி பதில் நீதவானினால் பிணையில் விடுவிக்கப்பட்டபோதிலும் பிணை நிபந்தனைகளை பூர்த்தி செய்ய முடியாததால் அவர்கள் சிறைச்சாலை அதிகாரிகளின் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என மெனிக்கின்ன பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# கடலில் மூழ்கிய வெளிநாட்டு பெண்ணை காப்பாற்ற சென்ற ஓட்டோ சாரதி மாயம்!

கொழும்பு, மே. 03

அஹங்கம கடலில் மூழ்கிய உக்ரை நாட்டுப் பெண் ஒருவரைக் காப்பாற்றச் சென்ற முச்சக்கரவண்டி சாரதியொருவர் நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளதாக அஹங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

அஹங்கம பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயது நபரொருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

இந்நிலையில், நீரில் மூழ்கிய வெளிநாட்டுப் பெண் காப்பாற்றப்பட்டுள்ளதுடன் காணாமல் போன நபரைத் தேடும் பணியில் கடற்படையினர் மற்றும் உயிர்காக்கும் பிரிவினர் ஈடுபட்டுள்ளதாக அஹங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# நீரில் மூழ்கிய இருவர் பாதுகாப்பாக மீட்பு!

கொழும்பு, மே. 03

பாணந்துறை கடற்கரையில் நீராடச் சென்ற இருவர் நீரில் மூழ்கிய நிலையில் உயிர் காக்கும் படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

38 வயதுடைய தாயும் அவரது 06 வயதுடைய மகளுமே நீரில் மூழ்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் மீட்கப்பட்ட இருவரும் சிகிச்சைக்காக பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(அ)

# உமா ஓயா திட்டத்தினால் ஒரு நாளில் 80 மில்லியன் ரூபாய் சேமிப்பு

கொழும்பு, மே. 03

உமாஓயா அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மின்சார சபைக்கு நாளொன்றுக்கு 80 மில்லியன் ரூபா சேமிக்கப்படும் என அதன் திட்டப் பணிப்பாளர் சுதர்ம எலகந்த தெரிவித்துள்ளார்.

உமாஓயா திட்டத்தினால் இதுவரை சுமார் 1,500 மில்லியன் ரூபா சேமிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த திட்டம் சுமார் ஒருமாத காலமாக நடைமுறைப் படுத்தப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி ஆகியோரின் தலைமையில் குறித்த திட்டம் அண்மையில் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

2007 நவம்பர் 27ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தி திட்டம் 2008 ஏப்ரல் 21ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ள இராமர் பால வேலைத்திட்டம்!

## உறுதியளித்தார் இந்திய தூதுவர்

மட்டக்களப்பு, மே. 03

**இராமர் பாலம் அமைப்பது தொடர்பான வேலைத்திட்டங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.**



மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில், நேற்று மட்டக்களப்பு காந்தி பூங்காவில் உள்ள மகாத்மா காந்தியின் சிலைக்கு மாலை அணிவித்து வழிபட்டதன் பின்னர் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் முன்னெடுக்கப்பட்ட கப்பல் சேவை தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, எதிர்வரும் காலத்தில் மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் நோக்கிய ரயில் சேவையினை விஸ்தரிப்பதற்கு இந்தியா நடவடிக்கையெடுக்கும் எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் ஏந்திரி என்.சிவலிங்கம், மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வர் க.சத்தியசீலன் உட்பட பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)



# அரச கால்நடை வைத்தியர்கள் சுகயீன விடுமுறை போராட்டம்

யாழ்ப்பாணம், மே. 03

சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அரச கால்நடை வைத்தியர்கள் நேற்று சுகயீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதன் காரணமாக, கால்நடைகளுக்கு சிகிச்சை மேற்கொள்ள அரச கால்நடை வைத்தியர் அலுவலகத்துக்குச் சென்ற மக்கள் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரி, கரைச்சி, கண்டாவளை, பளை கால்நடை வைத்திய அலுவலகத்தின் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மண் மேடு சரிந்து வீழ்ந்து ஒருவர் பலி

## வரக்காபொலவில் சம்பவம்

கொழும்பு, மே. 03

வரக்காபொல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் மண் மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வரக்காபொல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

எலிபன்கமுவ , தொலங்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயது நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் வீடு ஒன்றை நிர்மாணிப்பதற்காக அத்திவாரம் வெட்டிக்கொண்டிருந்தபோது திடீரென மண் மேடு சரிந்து வீழ்ந்ததில் பலத்த காயமடைந்துள்ளார்.

காயமடைந்தவர் வரக்காபொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரது சடலம் வரக்காபொல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் வரக்காபொல பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# பிரபல அரசியல்வாதியின் தலையீட்டால் மதுபான சாலைக்கு அனுமதிப்பத்திரம்!

கொழும்பு, மே. 03

எதிர்க்கட்சியின் உறுப்பினர் ஒருவர் மஹியங்கனை ரிதீமாலியத்த பிரதேசத்தில் மதுபானச் சாலையொன்றை ஆரம்பிக்க அரசாங்கத்தினால் அனுமதிப்பத்திரம் ஒன்றை பெற்றுக் கொண்டுள்ளதாக தெரியவருகிறது.

இந்த அனுமதிப்பத்திரம் குறித்த அரசியல்வாதியின் பிரத்தியேக செயலாளரின் மனைவியின் பெயரில் பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் பிபில பிரதேசத்தில் பிரதேச சபை வேட்பாளர் ஒருவர் எனவும் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரபல்ய அரசியல்வாதியொருவரின் தலையீட்டில் இந்த மதுபானச்சாலை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக ரிதீமாலியத்த பிரதேச பௌத்த சாசன தலைவர் அலுகெடியாவே சீலவங்ஷ தேரர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், ஜனாதிபதிக்கு மற்றும் பிரதமருக்கு முறைப்பாடு அளித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ரிதீமாலியத்த என்பது இலங்கையின் இரண்டாவது ஏழ்மையான கிராமம் என தெரிவித்த அவர், இவ்வாறான ஒரு பிரதேசத்துக்கு தேவை ஏழ்மையிலிருந்து மக்களை வெளிக்கொண்டு வரும் தீர்வுகளே தவிர மதுபானச்சாலைகள் அல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# நஞ்சு வைத்து என்னை கொலை செய்யச் சதி!

## முன்னாள் அமைச்சர் பரபரப்புத் தகவல்

கொழும்பு, மே. 03

தம்மை கொலை செய்வதற்கு நஞ்சூட்டப்பட்டது என முன்னாள் அமைச்சர் ரொசான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

சுமார் ஒன்றரை மாதத்திற்கு முன்னதாக இவ்வாறு நஞ்சு வழங்கப்பட்டது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாறையில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் பங்கேற்றபோது அவர் இந்த விடயத்தை கூறினார்.

தாம் ஜப்பானுக்கு சென்றிருந்தபோது நஞ்சு வழங்கப்பட்டமை கண்டறியப்பட்டதாக



வும் இதற்காக சிகிச்சை பெற்றுக்கொண்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த சூழ்ச்சி திட்டம் குறித்து அண்மையில் அரசியல்வாதி ஒருவர் கருத்து வெளியிட்டிருந்தார் என அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும் தமக்கு யார் நஞ்சூட்டினார்கள் என்பது குறித்தோ யார் இந்த சதித் திட்டத்தின் சூத்திரதாரி என்பது பற்றியோ ரொசான் ரணசிங்க வெளிப்படையாக கருத்து வெளியிடவில்லை. (அ)

# டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 9.1 வீதம் வலுவடைவு

கொழும்பு, மே. 03

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 9.1 வீதம் வலுவடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அத்துடன், யூரோ, ஸ்ரேலிங் பவுண்ட், ஜப்பானிய யென் மற்றும் இந்திய ரூபாவுக்கு நிகராகவும் இலங்கை ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அதேநேரம், மார்ச் மாத இறுதிக்குள், நாட்டின் மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கம் 5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தொழில்நுட்ப வல்லுநர்களின் பற்றாக்குறை ரயில் சேவைகளை முன்னெடுப்பதில் சிரமம்!

கொழும்பு, மே. 03

தொழில்நுட்ப வல்லுநர்களின் பற்றாக்குறையினால் எதிர்காலத்தில் ரயில் சேவை நெருக்கடியை சந்திக்க நேரிடும் என ரயில்வே தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வல்லுநர்களின் பற்றாக்குறையை தீர்ப்பதற்கு உரிய நடைமுறைகளை விரைவில் மேற்கொள்வது அவசியமானது என சங்கத்தின் தலைவர் எச்.ஆர். பி.உதயசிறி தெரிவித்தார்.

இதன் காரணமாக மக்கள் கடும் சிரமத்திற்குள்ளாவதனால் உடனடியாக பயிற்சி பெற்ற ஊழியர்களை நியமிக்குமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# புத்தளத்தில் சுறாக்களுடன் இரு சந்தேக நபர்கள் கைது!

கொழும்பு, மே. 03

புத்தளம் மாவட்ட கடற்றொழில் அலுவலக அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது, அழிந்துவரும் விலங்குகளின் குழுவைச் சேர்ந்த, கொல்லப்பட்ட சுறாக்களுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கற்பிட்டி கண்டகுழி பகுதியில் இவ்வாறு அருகிவரும் சுறா மீன்களை விற்பனை செய்வதற்காக சட்டவிரோதமாக பிடிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் மாவட்ட கடற்றொழில் நீரியவளத்துறை திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது ரெஜிபோர்ம் பெட்டியினுள் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதன்போது சுமார் 40 கிலோகிராம் சுறா மீன் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் புத்தளம் நீதிமன்றில் முன்னிலைப்படுத் தப்படவுள்ளதாக புத்தளம் மாவட்ட கடற்றொழில் நீரியவளத்துறை திணைக்களத்தினர் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தனிமையில் வசித்த மூதாட்டியை சித்திரவதை செய்த திருட்டு கும்பல்!

## நகை, பணம் அபகரிப்பு யாழில் அதிகாலை துணிகரம்

யாழ்ப்பாணம், மே. 03

**யாழில் வீடொன்றில் இருந்த வயோதிபப் பெண்ணின் தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருபாலைப் பகுதியிலுள்ள வீடொன்றில் தனித்திருந்த வயோதிபப் பெண்ணின் தங்க நகைகள், பணம் என்பன நேற்று முன் தினம் அதிகாலை கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

இதன்போது வீட்டிலிருந்த 3 பவுண் தங்க நகைகள், சுமார் 25 ஆயிரம் ரூபா பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளன.

வீட்டின் ஓட்டைப் பிரித்து உள்நுழைந்த 3 பேரைக் கொண்ட கும்பல் ஒன்று கொள்ளையில் ஈடுபட்டுள்ளது.

மூதாட்டியின் வாயைப் பொத்தி அச்சுறுத்திய குறித்த கும்பல், நகை,பணத்தைக் கொள்ளையிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதுடன், சம்பவ இடத்துக்குச் சென்ற தடயவியல் பொலிஸாரும் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதேவேளை குறித்த கொள்ளைச் சம்பவம் சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)



# வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்விசாரா ஊழியர் போராட்டம்

வவுனியா, மே. 03

வவுனியா பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்று வியாழக்கிழமை பணி பகிஸ்கரிப்பில் ஈடுபட்டதோடு பல்கலைக்கழக வாயிலிட கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்தனர்.

நாடாளாவிய ரீதியில் சம்பள உயர்வு உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து பல்கலைக்கழக தொழிற்சங்கக் கூட்டுக்குழுவினால் முன்னெடுக்கப்பட்டு வரும் பணி பகிஸ்கரிப்புக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக வவுனியா பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# தலைமன்னாரில் வசிக்கும் ஒருவரின் 9 கோடி ரூபா சொத்துக்கள் முடக்கம்!

## பொலிஸார் அதிரடி நடவடிக்கை



மன்னார், மே. 03

பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கு அமைவாக நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் "யுக்திய" தேடுதல் நடவடிக்கையின் கீழ் குற்றப்புலனாய்வு பிரிவு கீழ் பணிக்கப்பட்ட விசாரணைக்கு அமைவாக சட்ட விரோத சொத்துக்கள் விசாரணை பிரிவினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையில், சந்தேக நபர் ஒருவரின் 9 கோடியே 30 லட்சம் பெறுமதியான சொத்துக்கள் நேற்று முடக்கப்பட்டுள்ளன.

மன்னார் தலைமன்னார் பகுதியை சேர்ந்த 43 வயதான சந்தேக நபர் ஒருவருக்கு சொந்தமான இரண்டு வீடுகள், சொகுசு வாகனம் உள்ளடங்கலாக 9 கோடியே 30 இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களே மேற்படி நீதிமன்ற அனுமதியுடன் முடக்கப்பட்டுள்ளன.

குறித்த சந்தேக நபர் 2002 ஆம் ஆண்டு அரச வீட்டுத்திட்டம் ஒன்றை பெற்று, இரண்டு படகுகளை வைத்து சாதாரண குடும்பமாக வாழ்ந்து வந்த நிலையில், 2019 பின்னர் குறிப்பிட்ட காலத்துக்குள் பல கோடி சொத்துக்களைச் சேர்த்துள்ளார்.

அதன் அடிப்படையில் குற்றப்புலனாய்வு பிரிவின் கீழ் இயங்கும் சொத்து முடக்கள் பிரிவினர் கடந்த இரண்டு வருடங்களாக மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் நேற்று நீதிமன்ற அனுமதியை பெற்று வவுனியா பிரதி பொலிஸ்மா அதிபர் சாமந்த விஜசேகர மேற்பார்வையின் கீழ் மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்திரபாலவின் தலைமையில் கொழும்பு குற்ற புலனாய்வுப் பிரிவின் சட்ட விரோத விசாரணை பிரிவு பொலிஸாரினால் தற்காலிகமாக நேற்றிலிருந்து 7 தினங்களுக்கு சந்தேக நபரின் சின்னக் கடையில் காணப்படும் கடைத் தொகுதியுடன் கூடிய வீடு ஒன்றும் தலைமன்னார் பகுதியில் உள்ள விசாலமான வீடு, சொகுசு வாகனம் என்பனவும் முடக்கப்பட்டுள்ளன.

அதே நேரம் சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

வடக்கில் சட்ட விரோதமாக சம்பாதித்த சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளமை இதுவே முதல் முறை. இது போன்று சட்டவிரோதமாக சொத்துக்கள் ஈட்டிய பல்வேறு நபர்கள் தொடர்பில் விசாரணைகள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# வடக்கில் சில நாள்களுக்கு வெப்பம் உயர் மட்டத்தில்!

யாழ்ப்பாணம், மே. 03

வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் அடுத்த சில நாட்களுக்கு 42 பாகை செல்சியஸ் இனை விட வெப்பநிலை உயர்வாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன் மழை கிடைத்த பகுதிகளில் மழைக்கு அடுத்த நாட்களில் உயர் வெப்பநிலை நிலவும் என யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சூரியனுடைய கதிர்வீச்சின் குறிப்பிட்டளவு பங்கினை தெறிப்படையச் செய்வதில் வளிமண்டலத்தில் உள்ள தூசு துணிக்கைகள் பங்களிப்பு செய்கின்றன. அதனால் புவியின் மேற்பரப்புக்கு வருகின்ற கதிர்வீச்சின் அளவு கட்டுப்படுத்தப்படுகின்றது. இதனால் வெப்பநிலையும் கட்டுப்படுத்தப்படும்.

மிதமான மழை கிடைக்கும் போது அத் தூசு துணிக்கைகள் மழை நீரால் கழுவப்பட்டு அவை அகற்றப்படும்.

வடக்கு மாகாணம் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளிலும் மழை கிடைத்த அடுத்த நாட்களில் அதிகளவான வெப்பநிலை கிடைக்கும் வாய்ப்புள்ளது. கிடைக்கும் மழையும் தற்போது நிலவும் அதிக வெப்பநிலையைக் கட்டுப்படுத்தப் போதுமானதல்ல.

எனவே மழை பெய்தால் வெப்பநிலை குறையும் என நினைப்பது தற்காலிகமானது.

எதிர்வரும் நாட்களில் வெப்பநிலை சில பகுதிகளில் குறிப்பாக உள் நிலப்பகுதிகளில் (வடக்கு மாகாணத்தின் நடுப்பகுதிகள்)மிக உயர்வாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்வரும் 2 ஆம் திகதி நெடுங்கேணி, பனைநின்ற குளம் மற்றும் அம்பகாமம் பகுதிகளிலும், எதிர்வரும் 3 ஆம் திகதி பட்டிக்குடியிருப்பு, வெடிவைத்தகுளம், நெடுங்கேணி, கொக்கச்சான்குளம், பனைநின்றகுளம், அம்பகாமம், மற்றும் ஒதியமலை பகுதிகளிலும் எதிர்வரும் 4 ஆம் திகதி மாங்குளம், கனகராயன் குளம், பாலைப்பாணி, மூன்று முறிப்பு, வெடிவைத்தகல்லு, கொக்கச்சான்குளம், அம்பகாமம், பன்றிக்கெய்தகுளம் மற்றும் புளியங்குளம் பகுதிகளில் பிற்பகல் 1.00 மணி முதல் 2.30 மணி வரை நாளின் அதிகூடிய வெப்பநிலை 42 பாகை செல்சியஸ் இனை விட உயர்வாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை இக்காலப்பகுதியில் உணரக்கூடிய வெப்பநிலை 45 பாகை செல்சியஸ் இனை விட உயர்வாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்றும் கூட வட மாகாணத்தின் உள் நிலப்பகுதிகள் பலவற்றில் குறிப்பாக வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, செட்டிகுளம், நெடுங்கேணி மற்றும் மடு பிரதேசங்களில் பிற்பகல் 2.00 மணியளவில் 42 பாகை செல்சியஸ் அளவுக்கு வெப்பநிலை பதிவாகியுள்ளது. அதேவேளை உணரக்கூடிய வெப்பநிலை 44 பாகை செல்சியஸ் ஆக பதிவாகியுள்ளது.

தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளிலும் கிடைக்கும் வெப்பச் சலன மழை மேலும் ஒன்றிரண்டு நாட்களுக்கு தொடரும். ஆனால் இம் மழை செறிவான இடி மின்னலுடன் கூடிய மழை என்பதனால் இடி மின்னல் தொடர்பில் மிகவும் அவதானமாக இருப்பது சிறந்தது.

அதேவேளை எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு பின்னர் வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஒன்று உருவாகும் வாய்ப்புள்ளது. தற்போதைய நிலையின்படி இதனால் எமக்கு நேரடியான பாதிப்புக்கள் எவையும் இல்லை. எனினும் உருவாகும் காலப்பகுதிக்கு அண்மித்தே மேலதிக தகவல்களை அறிந்து கொள்ள முடியும்-என்றார்.

(அ)

# ருவாண்டா-இலங்கை புரிந்துணர்வு ஒப்பந்தம்

கொழும்பு, மே. 03

இராஜதந்திர, உத்தியோக பூர்வ அல்லது சேவை கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கு விசா பெறுவதில் இருந்து விலக்கு அளிப்பதற்காக ருவாண்டாவுக்கும் இலங்கைக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இரு தரப்பினருக்கும் இடையில் ஒப்புக் கொள்ளப்பட்டபடி 30 நாட்களுக்கு மிகாமல் ஒரு காலத்திற்கு விசா பெறுவதில் இருந்து இராஜதந்திரக் கடமை அல்லது சேவை கடவுச்சீட்டுகளை வைத்திருக்கும் குடிமக்களுக்கு விலக்கு அளிக்க இது முன்மொழிகிறது.

ருவாண்டாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை மேம்படுத்தும் நோக்கத்துடன், இரு நாடுகளிலிருந்தும் தூதரக, கடமை அல்லது சேவை கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கு விசா பெறுவதற்கான தேவையிலிருந்து விலக்கு அளிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட மே 2019 இல் ஒப்புதல் வழங்கப்பட்டது.

ஆனால் அரசாங்கத்தின் கூற்றுப்படி, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இதுவரை கையெழுத்திட முடியவில்லை.

ருவாண்டாவிற்கும் இலங்கைக்கும் இடையில் மேற்படி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு பொது பாதுகாப்பு அமைச்சர் முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலுவில் துறைமுகத்துக்கு இந்தியத் தூதுவர் விஜயம்

## கடலரிப்பு நிலைமையை பார்வையிட்டார்



அம்பாறை, மே. 03

**ஒலுவில் துறைமுகம் அமைந்துள்ள பிரதேசத்தைப் பார்வையிடுவதற்கும், அப்பகுதியில் நிகழ்ந்து வரும் கடலரிப்பைக் கண்டறிவதற்கும் இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா நேற்று முன் தினம் மாலை ஒலுவில் பிரதேசத்துக்கு உத்தியோக விஜயமொன்றை மேற்கொண்டார்.**

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமின் அழைப்பின் பேரில் இவ்விஜயம் அமைந்தது.

ஒலுவில் துறைமுகத்தையும் அதை சூழவுள்ள பிரதேசங்களையும் இந்திய உயர் ஸ்தானிகர் அடங்கிய குழுவினர் பார்வையிடுவதனைத் தொடர்ந்து அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில், இது தொடர்பிலான விரிவான கலந்துரையாடலொன்றும் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலின்போது துறைசார் உயரதிகாரிகளினால் இப்பிரதேசத்தில் நிகழ்ந்து வரும் கடலரிப்பு தொடர்பிலும், துறைமுக அபிவிருத்தி மற்றும் பிரதேச மக்களின் வாழ்வாதார நிலைமை தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டன.

இந்நிகழ்வின்போது தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு பெறுமதி மிக்க உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டதுடன், தூதுவருக்கு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் நினைவுப் பரிசும் வழங்கினார்.

இதன்போது உரையாற்றிய முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் குறிப்பிடுகையில், ஒலுவில் துறைமுகம் இந்தியாவுக்கு தாரை வார்க்கப்பட்டு போகின்றது என்னும் பொய்யான கருத்துக்கள் சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்டு வருகின்றன. இவ்விடயம் தற்கால சூழ்நிலையில் வேண்டுமென்று பரப்பப்பட்டு வருகின்றது. இவ்விடயம் உண்மைக்குப் புறம்பானதாகும்.

இது தொடர்பில் எவரும் குழம்ப வேண்டாம். ஆப்படியான எந்த நோக்கமும் எம்மிடம் கிடையாது. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இந்திய அரசாங்கத்தின் மூலம் கடந்த காலங்களில் பல்வேறு உதவிகளையும் மக்கள் நல அபிவிருத்தித் திட்டங்களையும் மேற்கொண்டு வருகின்றது. அதன் அடிப்படையில் கிழக்கில் நாம் எதிர் நோக்கி வரும் பிரச்னைகளுக்கு ஏதாவது தீர்வு கிடைக்க வேண்டுமாக இருந்தால் இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வ கோரிக்கையினை இந்தியாவிடம் முன்வைக்க வேண்டும். மக்களின் நலனில் நாம் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றோம். மக்கள் பாதிக்கும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் நாம் துணை நிற்கப் போவதில்லை-என்றார்.

இதேவேளை, இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா குறிப்பிடுகையில்-

இலங்கை அரசாங்கம் இந்திய அரசாங்கத்துடன் ஒற்றுமையாக செயற்பட்டு வருகின்றது. ஒலுவில் பிரதேசத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் காணப்படும் பிரச்னைகளுக்கு நிரந்தரத் தீர்வினை பெற்றுக் கொடுக்கும் பொருட்டு இலங்கை அரசாங்கம் எம்மிடம் கோரிக்கை விடுக்குமானால் அதனை பரிசீலிக்க தயாராக உள்ளோம். இவ்விடயம் தொர்பில் இலங்கை அரசாங்கம் வேண்டுகோளினை முன்வைக்கின்ற போது அவ்வேண்டுகோள் பரிசீலிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படும் என குறிப்பிட்டார்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் பைஷல் காசிம், முன்னாள் மாகாண அமைச்சர்களான எம்.எஸ்.உதுமா லெவ்வை, எம்.ஐ.எம்.மன்சூர் உள்ளிட்ட அரசியற் பிரமுகர்கள், அரச உயரதிகாரிகள், மீனவர்கள், துறை சார் முக்கியஸ்தர்கள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)



# கல்முனை ஸாஹிறா மாணவன் சாதனை

அம்பாறை, மே. 03

இம்முறை இடம்பெற்ற தேசிய மட்ட கணித ஒலிம்பியாட் போட்டியில் கல்முனை ஸாஹிறா கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவன் கிழக்கு மாகாணம் சார்பாக பங்கேற்று சர்வதேச மட்டப் போட்டி தெரிவுக்குழுவுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கல்முனை ஸாஹிறா கல்லூரியில் தரம் ஆறு பிரிவில் கல்வி கற்கும் அபுல் ஹக்கம் றமீஸ் முஹம்மட் றஹ்மி தேசிய மட்ட போட்டியில் வெற்றி பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

வெற்றி பெற்ற மாணவனை பயிற்றுவித்து வழிப்படுத்தி ஊக்குவித்த கல்லூரியின் கணிதபாட இணைப்பாளர் ஏ.எச்.எம்.றிஸான் மற்றும் கல்லூரியின் கணிதப்பாட ஆசிரியர்கள், கணிதபாட உதவிக்கல்விப் பணிப்பாளர்,ஆசிரிய ஆலோசகர், அனைவருக்கும் கல்லூரி அதிபர் எம்.ஐ. ஜாபிர் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

(அ)

# கல்முனை மாநகர சபை சுத்திகரிப்பு தொழிலாளர்கள் 80 பேர் கௌரவிப்பு




அம்பாறை, மே. 03

சாய்ந்தமருது மாளிகைக்காடு வர்த்தகர் சங்கத்தின் ஏற்பாட்டில் சாய்ந்தமருதில் இடம்பெற்ற மே தின நிகழ்வுகளின் போது சாய்ந்தமருது - மாளிகைக்காடு வர்த்தகர் சங்கத்தின் தலைவர் கலாநிதி எம்.எம்.முபாரக் கல்முனை மாநகர சபை சுத்திகரிப்பு தொழிலாளர்கள் 80 பேருக்கு அன்பளிப்பு பொருட்கள் வழங்கி கௌரவித்தார்.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ.எல்.அஸ்மி, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம் ஆஷிக், முபாரக் டெக்ஸ்டைல் நிறுவனத்தின் ஸ்தாபகர் அல்ஹாஜ் எம். மீராசாஹிப் உள்ளிட்ட அரச திணைக்கள அதிகாரிகள், தொழிலதிபர்கள் மற்றும் தொழிலாளர்கள் என பல்வேறு சமூகத்தினர் கலந்து கொண்டனர்.

(அ)

# சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலைக்கு மு.கா. தலைவர் விஜயம்



அம்பாறை, மே. 03

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலைக்கு முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான றவூப் ஹக்கீம் பாடசாலையின் அண்மைக் கால ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை அடைவுகள் குறித்து வாழ்த்துகள் தெரிவிப்பதற்காக திடீர் விஜயமொன்றை மேற் கொண்டதோடு பாடசாலையில் நிலவுகின்ற தேவைப்பாடுகள் குறித் தும் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது பாடசாலையில் நிலவுகின்ற இடத்தட்டுப்பாடு மற்றும் ஆசிரியர்கள் தட்டுப்பாடுகள் பற்றி பாராளுமன்ற உறுப்பினர் றவூப் ஹக்கீமுக்கு பாடசாலை அபிவிருத்திக் குழுவால் தெளிவூட்டப்பட்டது.

மேலும் இவ்விஜயத்தின்போது முன்னாள் கல்முனை மாநகர சபை மேயர் கலாநிதி சிராஸ் மீராசாஹிப்பும் கலந்து கொண்டமை விசேட அம்சமாகும்.

பாடசாலை சார்பாக அதிபர் எம்.ஐ.எம்.இல்யாஸ், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று குழுவின் செயலாளர் பொறியியலாளர் எம்.ஐ.எம். றியாஸ், உதவி அதிபர் எம்.ஏ.வீ.எல்.நஜீம் மற்றும் அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினர்கள் நலன் விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பனை ஓலைத் தொழிலில் 48 பெண் தொழிலாளர்கள்

திருமலை, மே. 03

திருகோணமலை தம்பலகாமம் பத்தினிபுரம் கிராமத்தில் பனை ஓலை கைத்தொழிலில் 48 பெண் தொழிலாளர்கள் இன்றும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்கள் தொழில் ரீதியாக பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தாம் தொழில் செய்து வருவதாக பெண்கள் கூறுகின்றனர்.

தொழிலாளர் தினத்திலாவது விமோசனம் கிடைக்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

பத்தினிபுரம் பனையோலை சார்ந்த உற்பத்தி கிராமம் இப்பிரதேச பெண்களின் நலன் கருதி மூன்று வருடங்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்டது.

பிரம்புகள், பித்தளை, மட்பாண்ட, மரப் பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு ராஜாங்க அமைச்சின் உதவியுடன் இக்கிராமம் [illegible] திறந்து வைக்கப்பட்டது.



எனினும் போதிய வருமானம், பனை ஓலை இல்லாமல் உற்பத்தி பொருட்களின் விலையில் ஏற்படும் மாற்றம் என்பன நமது வாழ்வாதாரத்தில் பாதிப்பினை ஏற்படுத்துவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சுமார் 25 வருட காலமாக இந்த பனை ஓலை கைத்தொழில் செய்து வருகிறோம். இதில் 48 பேர்கள் வேலை செய்கின்றார்கள்.


பெண்கள் சுய தொழிலாக செய்து கொண்டு வருகின்றார்கள். ஆனால் பனைமரம் இருக்கின்றது. பனை ஓலை வெட்டுவதற்கு ஆட்கள் இல்லை.

மழை காலங்களில் வருமானம் வருவதில்லை.

அரசாங்கம் உதவிகள் செய்து எமது தொழில் முன்னேற்றத்திற்கு உதவ வேண்டும் என தெரிவித்தனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## “எங்களுக்காக ஆர்ப்பாட்டம் செய்யும் உங்களுக்கு எங்கள் இதய நன்றிகள்!”

காஸா, மே 03

காஸா பள்ளத்தாக்கின் மத்தியிலுள்ள டெய்ர் எல் பலாவில் இடம்பெற்ற பேரணியில் அமெரிக்கா, கனடாவில் தங்களுக்காக குரல்கொடுக்கும் மாணவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வாசகங்களுடன் பலஸ்தீன சிறுவர்கள் காணப்படும் படங்கள் வெளியாகியுள்ளன.


அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஏனைய பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பலஸ்தீன சிறுவர்கள் , பெண்கள் தங்கள் இதயத்திலிருந்து நன்றிகளைத் தெரிவித்தும் போராட்டத்துக்கு ஆதரவை வெளியிட்டும் உள்ளனர்.

(எ)

## நிலவின் பள்ளங்களில் பனிக்கட்டிகள் ஆய்வு மூலம் உறுதி செய்தது இஸ்ரோ

சென்னை, மே 03

நிலவின் பள்ளங்களில் உறைந்த பனிக்கட்டிகள் இருப் பதை இஸ்ரோ உறுதி செய்துள் ளது. இந்நிலையில், சந்திரயான் - 3 விண்கலத் திட்டத்தில் கிடைக்கப்பெற்ற தகவல்களை இஸ்ரோ விஞ்ஞானிகள் தொடர்ந்து பகுப்பாய்வு செய்து வருகின்றனர்.



நிலவில் தரையிறங்கி ஆராய்ச்சி செய்வதற்காக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) சந்திரயான் - 3 விண்கலத்தைத் தயாரித்தது. இந்த விண்கலம் கடந்த ஜூலை 14 ஆம் திகதி விண்ணில் ஏவப்பட்டது. தொடர்ந்து பல்வேறு கட்ட பயணங்களுக்குப் பின்னர் விண்கலத்தின் ‘விக்ரம்’ லேண்டர் பாகம் ஓகஸ்ட் 23 ஆம் திகதி வெற்றிகரமாக நிலவில் தரையிறங்கியது. அதிலிருந்து ரோவர் வாகனமும் பத்திரமாக நிலவின் தரைப்பகுதிக்கு கொண்டுவரப்பட்டது.

இதன் மூலம் நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கிய முதல் நாடு எனும் பெருமையை இந்தியா பெற்றது. அதன்பின் லேண்டர் தரை இறங்கிய இடத்தில் இருந்தபடியும், ரோவர் நிலவின் மேற்பரப்பில் ஊர்ந்து சென்றும் 14 நாட்கள் ஆய்வு மேற்கொண்டு பல்வேறு அரிய தகவல்களையும், படங்களையும் அனுப்பியது.

இதையடுத்து சந்திரயான் - 3 விண்கலத் திட்டத்தில் கிடைக்கப் பெற்ற தகவல்களை இஸ்ரோ விஞ்ஞானிகள் தொடர்ந்து பகுப்பாய்வு செய்து வந்தனர். இதனடிப்படையில் நிலவின் பள்ளங்களில் உறைந்த பனிக்கட்டிகள் இருப்பதை இஸ்ரோ உறுதி செய்துள்ளது.

இஸ்ரோவின் விண்வெளி பயன்பாட்டு மையத்துடன் இணைந்து ஐ. ஐ. டி. கான்பூர், தெற்கு கலிபோர்னியா பல்கலைக்கழகம், ஜெட் ப்ராபல்ஷன் ஆய்வகம் மற்றும் ஐ. ஐ. டி. (ஐ. எஸ்.எம்) தன்பாத் ஆராய்ச்சியாளர்கள் இது தொடர்பில் ஆய்வு செய்து வந்தனர். இதில் நிலவின் துருவப்பகுதிகளில் பனிக்கட்டிகள் உறைந்துள்ளதை ஆராய்ச்சியாளர்கள் உறுதி செய்தனர்.

நிலவில் முதல் இரண்டு மீற்றர்களில் உள்ள பனியின் அளவு இரு துருவங்களின் மேற்பரப்பில் உள்ளதை விட 5 முதல் 8 மடங்கு பெரியதாகும். சந்திரனில் துளையிட்டு அவற்றின் மாதிரியை ஆய்வு செய்ய வேண்டும். இது எதிர்கால நிலவு பயணங்களுக்கு உதவியாக அமையும். மேலும், வட துருவப்பகுதியில் உள்ள நீர் பனியின் அளவு, தென் துருவப் பகுதியை விட 2 மடங்கு அதிகமாகும். இது சார்ந்து ஆய்வுகள் தொடர்ந்து வருகின்றன.

(எ)

## சமூக ஊடகத்தில் பிள்ளைகளின் படங்களை பகிர்வதால் ஆபத்து!

### அவுஸ்திரேலியா எச்சரிக்கை

கான்பரா, மே 03

சமூக ஊடகங்களில் தங்கள் பிள்ளைகளின் படங்களை பெற்றோர் பகிர்ந்து கொள்வது ஆபத்துக்களை உருவாக்குகின்றது என அவுஸ்திரேலிய அரசாங்கம் எச்சரித்துள்ளது.

சமூக ஊடகங்களில் தங்கள் பிள்ளைகளின் படங்களைப் பதிவிடும் பெற்றோர்களை பாலியல் நோக்கத்தில் பலர் இலக்குவைப்பது கருத்துக் கணிப்பொன்றின் மூலம் தெரிய வந்ததைத் தொடர்ந்தே இந்த எச்சரிக்கை வெளியாகியுள்ளது.

சமூக ஊடகங்களில் தங்கள் பிள்ளைகளின் படங்களை இலக்குவைத்து செயல்பட்டுள்ள கும்பல்கள் தாங்கள் பணம் செலுத்தினால் பிள்ளைகளின் நிர்வாணப் படங்களைத் தருவீர்களா என வேண்டுகோள் விடுத்தமை இந்த கருத்துக் கணிப்பின் போது தெரியவந்துள்ளது.

4000 பேரிடம் இந்த விடயங்கள் குறித்து கருத்துக் கோரப்பட்டதாகவும் இவர்களில் 100 இற்கும் அதிகமான பெற்றோர் தங்களிடம் தங்கள் பிள்ளைகளின் நிர்வாணப் படங்களை ஆகக்குறைந்தது ஒருவராவது கோரியதாக தெரிவித்துள்ளனர் என கருத்துக் கணிப்பை மேற்கொண்டவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சிறுவர் பாலியல் நாட்டம் கொண்டவர்கள் உட்பட பலர் தங்கள் பிள்ளைகளின் படங்களை பார்த்த பின்னர் தங்களிடம் மேலும் படங்களை கோரினார்கள் எனத் தெரிவித்துள்ளனர்.

பொதுவான சமூக ஊடகப் பதிவுகள் போன்றவற்றில் படங்களை பகிர்ந்துகொள்ளும் பெற்றோரிடம் இவ்வாறான வக்கிரமான கேள்விகள் கேட்கப்படலாம் என அவுஸ்திரேலிய குற்றவியல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

(எ)

## புகலிடக் கோரிக்கையாளரை வெளியேற்றும் பிரித்தானியா

லண்டன், மே 03

புகலிடக் கோரிக்கையாளர்களை ருவாண்டாவுக்கு அனுப்பும் திட்டத்தின் ஒரு பகுதியாக புகலிடக் கோரிக்கையாளர்களை கைது செய்யும் நடவடிக்கைகளை பிரித்தானிய அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர்

புகலிடக் கோரிக்கையாளர்களுடன் முதலாவது விமானம் ஜூலை மாதம் முதல் வாரம் ருவாண்டா செல்லக்கூடும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.


பிரிட்டனில் தங்கியிருப்பதற்கு உரிமையில்லாதவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளில் எங்களின் அர்ப்பணிப்பு மிக்க சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ள உள்துறை அமைச்சர் ஜேம்ஸ் கிலெவெர்லி இவர்களை விரைவாக கைது செய்தால் எங்கள் விமானங்களை ருவாண்டாவுக்கு அனுப்பலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ருவாண்டா பாதுகாப்பான மூன்றாவது நாடு என பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளதைத் தொடர்ந்தே சட்டவிரோத குடியேற்றவாசிகளை அங்கு நாடு கட[illegible] நடவடிக்கைகள் ஆரம்[illegible]யுள்ளன.

பிரிட்டனின் உயர்நீதிமன்றம் இந்த நடவடிக்கை சட்டவிரோதமானது என தெரிவித்துள்ள நிலையிலேயே பிரிட்டன் நாடாளுமன்றம் ருவாண்டா பாதுகாப்பான மூன்றாவது நாடு என தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இதேவேளை, இந்த அரசாங்கம் மனிதாபிமானத்தின் கடைசி துளியையும் இழந்துவிட்டது என பிரீடம் புறொம் டோர்ச்சர் என்ற மனிதாபிமான அமைப்பு பிரிட்டன் அரசாங்[illegible] துள்ளது.

(எ)



## நெடுஞ்சாலை இடிந்து விழுந்து சீனாவில் 24 பேர் உயிரிழப்பு!

பீஜிங், மே 03

தெற்கு சீனாவில் கனமழை காரணமாக நெடுஞ்சாலை இடிந்து விழுந்ததில் வாகனங்கள் அதில் கவிழ்ந்து 24 பேர் உயிரிழந்தனர்.

தெற்கு சீனாவின் குவாங்டாங் மாகாணத்தின் சில பகுதிகளில் கடந்த 2 வாரங்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் மெய்சூ நகரம் மற்றும் அதையொட்டிய கிராமங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் மெய்சூ நகருக்கும் டபு கவுன்ட்டிக்கும் இடையே நெடுஞ்சாலையின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது.

மலைப் பகுதியில் சுமார் 18 மீற்றருக்கு வீதி இடிந்து விழுந்ததில் 18 கார்கள் அதில் சரிந்து உருண்டோடின. இந்த விபத்தில் 24 பேர் உயிரிழந்தனர். சுமார் 30 பேர் மீட்கப்பட்டு, மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

(எ)

## வெப்ப அலை தாக்கத்தால் இந்தியாவில் 9 பேர் மரணம்

டில்லி, மே 03

இந்தியாவில் சில இடங்களில் வெப்பத்தின் தாக்கம் அதிகரித்தமையால் 9 பேர் உயிரிழந்தனர். ஏப்ரல் மாதத்தில் கிழக்கு இந்தியாவில் அதிகரித்த வெப்பம் பதிவாகியுள்ளது.

ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் இந்தியாவின் தென்பகுதி, மத்திய இந்தியா, கிழக்கு இந்தியா, வடமேற்கு இந்தியாவின் சமவெளிப் பகுதிகளில் வழக்கத்தை விட அதிகமான வெப்ப அலை வீசும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் 1901 ஆம் ஆண்டுக்குப் பிறகு அதிக வெப்பம் பதிவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் மைத்திரியின் காவலன் அல்லன்!

## கட்சியை மீட்பதே இலக்கு என்கிறார் விஜயதாச ராஜபக்ஷ



கொழும்பு, மே. 03

"நான் மைத்திரிபால சிறிசேனவின் காவலன் அல்லன். சுதந்திரக் கட்சியை மீட்கவே வந்துள்ளேன். எனவே, அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டால் கட்சியை பலப்படுத்த முடியும்."-என்று சுதந்திரக் கட்சியின் பதில் தலைவராக மைத்திரிபால தரப்பால் நியமிக்கப்பட்டவரும், நீதி அமைச்சருமான விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

நான் பதவிகளுக்காக சண்டையிடுபவன் அல்லன். சுதந்திரக் கட்சியை கைப்பற்றும் நோக்கமும் கிடையாது. கட்சியை கட்டியெழுப்ப வேண்டும் என்ற நோக்கிலேயே பதவியை ஏற்றேன். இதன் பின்னணியில் வேறு சூழ்ச்சி எதுவும் இல்லை.

சுதந்திரக் கட்சியில் உள்ள எந்தவொரு தரப்புடனும் எனக்கு பிரச்னை இல்லை. நிமல் சிறிபாலடி சில்வா, துமிந்த திஸாநாயக்க உள்ளிட்டவர்களுடன் இணைந்து செயற்பட்டுள்ளேன்.

ஒன்றிணைந்தால் கட்சியை பலப்படுத்தலாம்.

கட்சி முடிவெடுத்தால் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட தயார்.-என்றார். (அ)

# நாட்டின் உத்தியோகபூர்வ கையிருப்புகள் அதிகரிப்பு

கொழும்பு, மே. 03

நாட்டின் மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு 05 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் வரை மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு அளவு அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

மொத்த உத்தியோகபூர்வ கையிருப்பு அதிகரிப்புக்கு முக்கியமாக, உள்நாட்டு மற்றும் அந்நிய செலாவணி சந்தைகளில் இருந்து நிகர அடிப்படையில் மத்திய வங்கி அந்நிய செலாவணியை கணிசமான அளவில் கொள்முதல் செய்ததன் காரணமாகும்.

இந்த உத்தியோகபூர்வ கையிருப்புகளில் சீனாவின் மத்திய வங்கியின் அந்நிய செலாவணி வசதியும் அடங்கும்.

இதேவேளை, மார்ச் மாதத்தில் வர்த்தகப் பொருட்களின் ஏற்றுமதி வருமானம் 1,139 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் இது 9.8 வீத அதிகரிப்பு என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில்துறை பொருட்களின் ஏற்றுமதியின் அதிகரிப்பு முக்கியமாக ஏற்றுமதி வருவாய் அதிகரிப்புக்கு பங்களித்துள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் வர்த்தகப் பொருட்களின் இறக்குமதிக்கான செலவு அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் சுற்றுலா வருமானமும் அதிகரித்துள்ளதுடன் வெளிநாட்டு ஊழியர்களின் பணம் மார்ச் மாதத்தில் 572 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

ஏப்ரல் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 9.1 வீதத்தினால் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ)

# போலி அழைப்புகள் மூலம் பண மோசடி!

## சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, மே. 03

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எனக் கூறி வர்த்தகர்களுக்கு தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டு பணம் பெறும் மோசடி ஒன்று இடம்பெற்று வருவதாக இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

கடந்த சில நாட்களாக இது தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அதன் தலைவர் உபுல் ரோஹண குறிப்பிட்டார்.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எனக் கூறிக்கொண்டு தொலைபேசி அழைப்புக்களை மேற்கொள்ளும் நபர்களுக்கு பணம் வழங்குவதை தவிர்க்குமாறு உபுல் ரோஹண, வர்த்தகர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நட்சத்திர ஹோட்டல்களுக்குக் கூட தொலைபேசி அழைப்பெடுத்து வலய பொது சுகாதார பரிசோதகர் போல் நடித்து பணம் கேட்கின்றனர். சில தொழிலதிபர்களை ஏமாற்றி பணம் வசூலித்த முறைப்பாடுகள் ஏராளம். சமீப காலமாக பொலிஸ் நிலையங்களில் ஏராளமான முறைப்பாடுகள் வந்துள்ளன. எனவே இது போன்ற தொலைபேசி அழைப்புக்கள் ஏதும் வந்தால் பணம் வழங்குவதை தவிர்த்து அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் முறையிடவும்-என்றார் அவர். (அ)


# உயர்தர பெறுபேறு இந்த மாத இறுதியில்

கொழும்பு, மே. 03

2023 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் இம்மாதம் இறுதி வாரத்தில் வெளியிடப்படும் என்று பரீட்சைத் திணைக்களத்தின் வட்டாரங்கள் தெரிவித்தன.

2023 ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைக்கு, 281,445 பாடசாலை விண்ணப்பதாரர்களும் 65,531 தனியார் விண்ணப்பதாரர்களும் பரீட்சைக்கு தோற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மண்டைதீவு சென்ற எரிக் சொல்ஹெய்ம்!




யாழ்ப்பாணம், மே. 03

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச காலநிலை ஆலோசகரும், முன்னாள் நோர்வே வெளிவிவகார அமைச்சருமான எரிக் சொல்ஹெய்ம்ம் வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸ்ம் யாழ்ப்பாணம் மண்டைத்தீவு பகுதிக்கு நேற்று முன் தினம் கள விஜயம் மேற்கொண்டனர்.

கண்டல் தாவரங்களினால் இயற்கையாக அமைந்த நன்மைகள் பற்றியும், மண்டைதீவில் கண்டல் தாவரங்களின் பரம்பல் தொடர்பிலும் இதன் போது கவனம் செலுத்தப்பட்டது.

வெள்ள அனர்த்தத்தை தவிர்க்கவும், நீர்வாழ் உயிரினங்களின் பெருக்கத்தை அதிகரிக்கவும் இப்பிரதேசத்தில் வளரும் கண்டல் தாவரங்களின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. அந்தவகையில் அவ்வாறான பங்களிப்பை அதிகரிக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் இதன்போது ஆராயப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அமைச்சு பதவியை இழந்த நசீர் ஆளுநராக நியமனம்!



கொழும்பு, மே. 03

தென் மாகாண ஆளுநராக லக்ஷ்மன் யாபா அபேவர்தன மற்றும் வட மேல் மாகாண ஆளுநராக நசீர் அஹமட் ஆகியோர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் நேற்று முற்பகல் பதவியேற்றுக் கொண்டனர்.

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியில் நஷீர் அஹமட் சுற்றாடல் அமைச்சராக இருந்தார். எனினும், உயர் நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் அவர் பாராளுமன்ற உறுப்புரிமையை இழந்ததால், அமைச்சு பதவியும் இல்லாமல்போனது. (அ)

# ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துக்கு அருகே ரூ. 15 கோடி பெறுமதியான போதைப்பொருள்!

கொழும்பு, மே. 03

ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு அருகில் நேற்று நடத்தப்பட்ட சுற்றிவளைப்பின் போது, டுபாய் கபில என்ற ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிக்கு சொந்தமானது எனச் சந்தேகிக்கப்படும் 15 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துக்கு அருகாமையில் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் நடத்திய இந்த சுற்றிவளைப்பில் 13 கிலோ ஹெரோயின், 6 கிலோ கிராம் ஹாஷ், 500 கிராம் கொக்கெய்ன் மற்றும் 15 இலட்சம் ரூபா கைப்பற்றப்பட்டுள்ளது.

போதைப்பொருள் கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட கார் ஒன்றுடன், பணத்தை வைத்திருந்த சந்தேக நபர் மற்றும் பெண் சந்தேக நபர் ஒருவரும் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

51 வயதான சந்தேக நபர் ஒருவரும் பன்னிப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நபர் ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தை அண்டிய பகுதியில் வாடகை வீட்டில் சுமார் 2 வருடங்களாக பாரியளவில் போதைப்பொருள் கடத்தலை மேற்கொண்டு வருவதாக தகவல் கிடைத்துள்ளது.

இதேவேளை, கடந்த ஏப்ரல் 24ஆம் திகதி இந்த போதைப் பொருள் விநியோகம் தொடர்பில் கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் 1 கிலோ 60 கிராம் ஹெரோயின் மற்றும் 49 இலட்சம் ரூபா பணத்துடன் கிராண்ட்பாஸ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விமல், கம்மன்பில தரப்புக்கு அழைப்பு விடுக்கும் மொட்டு

கொழும்பு, மே. 03

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி, கூட்டணியில் இருந்து வெளியேறியவர்கள் மீண்டும் இணைந்து செயல்பட தயாரெனில் அது தொடர்பில் பேச்சு நடத்துவதற்கு தயார் - என்று மொட்டு கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

விமல் வீரவன்ச, உதய கம்மன்பில உள்ளிட்டவர்களை மொட்டு கட்சி கூட்டணியில் இணைத்து கொள்வதற்கு பிரதமர் தினேஷ் குணவர்தனவின் உதவியை, பசில் ராஜபக்ச நாடியுள்ளார் என வெளியாகும் தகவல்கள் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

இது தொடர்பில் தனிப்பட்ட ரீதியில் எனக்கு எவுதும் தெரியாது. ஆனால் கட்சி என்ற ரீதியில், எம்மில் இருந்து விலகிச்சென்றவர்கள் மீண்டும் இணையத் தயாரெனில் அது தொடர்பில் பேச்சு நடத்தி, பிரச்னைகளை தீர்க்க தயாரென நாம் ஏற்கனவே அறிவித்துள்ளோம்.

பொதுஜன பெரமுன கட்சியென்பது நாட்டு மக்களை நேசிக்கும் கட்சியாகும். நாட்டை மீட்ட தலைவரே கட்சிக்கு தலைமைத்துவம் வழங்குகின்றார். எனவே, நாட்டை நேசிக்கும் கட்சிகள் எம்முடன் இணைந்து செயற்படலாம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தமிழர்...

மிகச்சிறந்த விடயமாகும். பாதுகாப்பு சிறந்த நிலையில் உள்ளது. யுத்தம் நடந்த காலத்துக்குத் திரும்பிச்செல்வதை எவரும் விரும்பவில்லை.

இருப்பினும், தமிழர்களின் பல அபிலாசைகள் இன்னும் பூர்த்திசெய்யப்படவேண்டிய நிலையிலேயே உள்ளன. குறிப்பாக யுத்தத்தின்போது காணாமல் ஆக்கப்பட்ட தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியாமல் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் காத்திருக்கின்றன.

கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகள் இன்னமும் முழுமையாக அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவில்லை. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மத வழிபாட்டுத்தலங்கள் மற்றும் ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டு நிலவும் குழப்பங்களுக்கு அமைதியான முறையில் தீர்வு காணப்படவேண்டும். வடக்கு இலங்கையில் வேலைவாய்ப்புக்கள் மற்றும் சுபீட்சம் என்பன உறுதிப்படுத்தப்படவேண்டும். இலங்கை அரசு அதிகாரங்களைப் பகிர வேண்டும்.

தமிழர் உரிமைகளுக்கான போராட்டம் தொடரும். இருப்பினும் அது வன்முறையற்ற விதத்தில் தொடரும் - என்றுள்ளது. (ஐ)

### ரூ.1700...

டுள்ளதாகவும், இந்த வர்த்தமானி அறிவித்தலை செல்லுபடியற்றதாக்குவதற்காக நீதிமன்றத்தை நாடவுள்ளதாகவும் ம்மேளனத்தின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று பெருந்தோட்ட கம்பனிகளின் உயரதிகாரிகளுடன் கொழும்பில் நடைபெறவுள்ளதாகவும், இந்த சந்திப்பைத் தொடர்ந்து, நீதிமன்றத்தை நாடும் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### ஐ.தே.க....

புதுடில்லியில் நேற்று முன்தினம் பா. ஜ. கவின் வெளிவிவகார பிரிவின் பொறுப்பாளர் விஜய் சௌதைவேலின் அழைப்பில் 10 நாடுகளை சேர்ந்த 18 முக்கிய கட்சிகளின் பிரதிநிதிகள் சந்தித்தனர். இதில், பங்கேற்ற கட்சிகள் அனைத்தும் இந்தியாவின் மூலோபாய - நட்புறவில் நெருக்கமான கட்சிகளாகும்.

இதில், இலங்கை சார்பில் ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் பங்கேற்றன. தற்போது, இந்த இரு கட்சிகளுமே பரஸ்பர ஒத்துழைப்புடன் நாட்டை ஆட்சி செய்து வருகின்றன. இந்த நிலையில், வரும் ஜனாதிபதித் தேர்தலில் இந்த இரு கட்சிகளுமே கூட்டணியாக தேர்தலை சந்திக்கவுள்ளன என்று கருதப்படுகின்றது.

இந்த நிலையில், இந்தியாவை ஆளும் பா. ஜ. கட்சி தனது பிரசார உத்திகள் மற்றும் அனுபவங்கள் - அறிவை இந்தக் கட்சிகளுக்கு பகிர்ந்துள்ளது. இதன் மூலம் இந்த இரு கட்சிகளும் வெற்றி பெறுவதை இந்தியா ஆசீர்வதிக்கிறது என்ற மறைமுக செய்தியை விடுத்துள்ளதா? என்ற கேள்வியை அரசியல் அவதானிகள் மத்தியில் எழுப்பியுள்ளது.

அண்மையில், இந்தியா ஜே. வி. பி. கட்சியினரை அழைத்த போதிலும் அந்தக் கட்சிக்கோ அல்லது வேறு எந்தக் கட்சிக்குமோ அழைப்பு விடுக்கப்படவில்லை என்ற விடயத்தையும் இலங்கை அரசியல் தரப்புகள் சுட்டிக்காட்டின.

மேலும், இந்தியாவுக்கு சென்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன பெரமுனவின் பிரதிநிதிகள் இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர், மத்திய ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஸ்னவ் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அரசியல் சூழ்ச்சிகளை தவிர்த்துவிட்டு அரசு கடனை மறுசீரமைக்கவேண்டும்!

## சம்பிக்க ரணவக்க எம். பி.

கொழும்பு, மே 01

வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு தாமதமடைந்தால் பிரதான கடன் வழங்குநர்களுக்கு தாமத கட்டணம் செலுத்த நேரிடும். ஆகவே, அரசியல் சூழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் வழங்குவதை தவிர்த்து விட்டு எதிர்வரும் ஜூலை மாதத்துக்குள் வெளிநாட்டு கடன்களை அரசாங்கம் மறுசீரமைக்க வேண்டும் என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

நேற்று அவரின் கட்சி பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இவற்றைத் தெரிவித்தார்.

அரசமுறை கடன் மறுசீரமைப்பு தொடர்ந்து இழுபறி நிலையில் உள்ளது. எதிர்வரும் ஜுலை மாதத்துக்கு முன்னர் வெளிநாட்டு கடன்களை மறுசீரமைக்காவிட்டால் பெரும் நெருக்கடிகளை எதிர்க்கொள்ள நேரிடும்.

வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்காக இலங்கை முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள், இருதரப்பு மற்றும் பல்தரப்பு பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான செயற்திட்ட தலைவர் பீட்டர் ப்ருயர் தலைமையிலான பிரதிநிதிகள் குழு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபைக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு தாமதமானால் ஆசிய அபிவிருத்தி வங்கி,உலக வங்கி ஆகிய நிதி நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப் பெறும் அபிவிருத்தியில்லா நிவாரண ஒத்துழைப்புகள் முடக்கப்படும். இவ்வாறான நிலை ஏற்பட்டால் சுமார் 800 மில்லியன் டொலரை இலங்கை இழக்க நேரிடும்.

வெளிநாட்டு கடன்களை போன்று சர்வதேச பிணைமுறியாளர்களிடமிருந்து பெற்றுக்கொண்ள்ள கடன்களும் மறுசீரமைக்கப்பட வேண்டும். கடந்த மார்ச் மாதம் இலங்கை முன்வைத்த யோசனைகளை பிணைமுறியாளர்கள் புறக்கணித்துள்ளனர். கடந்த மாதம் பிணைமுறியாளர்கள் முன்வைத்த யோசனைகளை இலங்கை புறக்கணித்துள்ளது.

வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு தாமதமடைந்தால் பிரதான கடன் வழங்குநர்களுக்கு தாமத கட்டணம் செலுத்த வேண்டும். ஆகவே அரசியல் சூழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் வழங்குவதை தவிர்த்து விட்டு எதிர்வரும் ஜூலை மாதத்துக்குள் வெளிநாட்டு கடன்கள் மறுசீரமைக்கப்பட வேண்டும்.

சர்வதேச நாணய நிதியம் 16 முக்கிய யோசனைகளை முன்வைத்துள்ளது. இந்த யோசனைகளை அரசாங்கம் முழுமையாக செயற்படுத்தவில்லை. விலை மனு கோரல்கள் வெளிப்படைத்தன்மையுடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது செயலளவில் செயற்படுத்தப்படவில்லை.

அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முறையற்ற வகையில் புதிய வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் வரி செலுத்தாத செல்வந்தர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை.

இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகிய அரச வங்கிகளிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன்களை மீள செலுத்ததாத நபர்களின் பெயர்களை நிதியமைச்சிடம் கோரியிருந்தேன். இதுவரை முழுமையான விபரம் கிடைக்கவில்லை.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு நடுத்தர மக்களை நெருக்கடிக்குள்ளாக்குவதை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள வேண்டும். வரி செலுத்த வேண்டிய நபர்களிடமிருந்து முறையாக வரியையும், நிலுவை வரியையும் அறவிட்டால் தற்போது முறையற்ற வகையில் அமுல்படுத்தப்பட்டுள்ள சேர் பெறுமதி வரியையும் குறைக்கலாம் - என்றார். (ஐ)

# இன, மத கலவரத்தைத் தடுத்த பேராயர் மீது போலிவிமர்சனம்

## காவிந்த எம். பி. காட்டம்

கொழும்பு, மே 03

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட போது ஏற்படவிருந்த இன, மத கலவரத்தை பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தடுத்தார். எனவே அவர் மீது போலியான விமர்சனங்களை முன்வைக்க வேண்டாம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் பணிமனையில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் 3 நாட்கள் விவாதங்கள் இடம்பெற்றன. இதன் போது நாம் ஆதரங்களுடன் 4 காரணிகள் தொடர்பில் விளக்கமளித்திருந்தோம்.

பாராளுமன்றத்தில் சாமர சம்பத் தசநாயக்க பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையை கடுமையாக விமர்சித்தார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட போது ஏற்படவிருந்த இன, மத கலவரத்தை பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தடுத்தார்.

பாதிக்கப்பட்ட மக்களை அமைதியாக நல்வழிப்படுத்தினார். உயிர்த்த ஞாயிறு தாக்கல்களை தமது அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்த வேண்டாம் என அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம். தொடர்ச்சியாக அவர் இவ்வாறு கிறிஸ்தவத்தை அவமதிக்கும் வகையில் கருத்துகளை வெளியிடுவதை அனுமதிக்க முடியாது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் சி. ஐ. டி. விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இந்த வழக்கு வரும் 10ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு வருகிறது. எனவே இதிலிருந்து மைத்திரிபால சிறிசேனவால் விலகியிருக்க முடியாது - என்றார். (ஐ)

### சமய..

நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து நீதிமன்றத்தின் அனுமதி பெற்று நேற்றைய தினம் அந்த இடம் நேற்று முழுமையாக தோண்டப்பட்டது.

ஊர்காவற்றுறை நீதிவான் நளினி சுபாகரன், சட்ட மருத்துவ அதிகாரி செ. பிரணவன் தொல்லியல் துறை அதிகாரி மணிமாறன் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள், பொலிஸார், தடயவியல் பொலிஸார் முன்னிலையில் அகழ்வு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது, எலும்புக்கூடு முழுமையாக மீட்கப்பட்டது. இந்த எலும்புக்கூடு பெண் ஒருவருடையது என்று கருதப்படுகின்றது. அத்துடன், செப்பு நாணயங்கள், துணி, அரசி மணிகள் என்பனவும் மீட்கப்பட்டன.

இதனால், இந்து சமய முறைப்படி பெண்ணின் உடல் புதைக்கப்பட்டுள்ளது என்றும் இந்தப் பகுதி முன்னர் மயானமாக இருந்திருக்கலாம் எனவும் கருதப்படுகின்றது.

நேற்று மதியத்துடன், அகழ்வு பணிகள் நிறைவடைந்த நிலையில் எலும்புக்கூட்டை பகுப்பாய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க சட்ட மருத்துவ அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

அத்துடன், மீட்கப்பட்ட எலும்புக்கூடு மற்றும் சான்றுப் பொருட்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. (ஐ)

### பஸ்...

நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த தீர்மானம் மேற் கொள்ளப்பட்டுள் ளது.

இதற்கமைய பஸ் கட்டணம் மாற்றமின்றிப் பேணப் படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### கணவர்...

அரைக்கும் ஆலைக்கு அண்மையிலுள்ள அவருக்கு சொந்தமான வீட்டிலேயே சடலம் மீட்கப்பட்டது.

தகவல் அறிந்து அங்கு சென்ற மனைவி கணவரின் சடலத்தை பார்த்துள்ளார். இதைத் தொடர்ந்து வீட்டுக்கு சென்று தவறான முடிவு எடுத்து உயிரை மாய்த்துள்ளார்.

வேதாரணியம் லோகநாதன் (45), லோகநாதன் பரமேஸ்வரி (37) ஆகியோரே உயிரிழந்தனர். அவர்களுக்கு 3 பிள்ளைகள் உள்ளனர்.

லோகநாதனின் சடலம் காணப்பட்ட வீட்டின் மலசலகூட குழியை உடைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. சடலத்தை மறைக்க இந்த முயற்சி எடுக்கப்பட்டதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் நெடுங்கேணி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

### அரச...

நிறைவேற்று சேவைகளில் ஈடுபடும் அதிகாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பு கோட்டையில் பேரணியை முன்னெடுத்து, நிதி அமைச்சுக்கு முன்பாக ஒன்றுகூடி போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (ஐ)

### உதிகதிகளை...

ஆணைக் குழு வெளியிடவேண்டும்.

தேர்தலுக்கான தயார் படுத்தலின் ஒருகட்டம் தான் அவசர அவசரமாக ஆளுநர் பதவிகளில் ஜனாதிபதி மாற்றங்களை மேற்கொண்டு வருவதாக தெரிய வருகிறது. (அ)

### இலங்கை...

சீனாவுக்கும் இடையிலான நீண்ட கால நட்புறவு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பில் புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்கும்" என்று பிரதமர் இதன்போது தெரிவித்தார்.

இதேசமயம், கடனை மறுசீரமைத்தல் மற்றும் பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கான இலங்கையின் முயற்சிகளுக்கு சீனாவின் தொடர்ச்சியான ஆதரவை உறுதிப்படுத்துவதாக சீனத் தூதுவர் இந்தக் கலந்துரையாடலின்போது குறிப்பிட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# "பராட்டே" சட்டத்தை டிசெம்பர் 15 வரை இடைநிறுத்த பாராளுமன்ற குழு அனுமதி

கொழும்பு, மே 03

"பராட்டே" சட்டத்தை டிசம்பர் 15 ஆம் திகதி வரை இடைநிறுத்துவது தொடர்பான சட்டமூலத்துக்கு நிபந்தனைகளின் கீழ், நிதி பற்றிய பாராளுமன்ற குழுவில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கடன் பெறுநர்களால் மீளச் செலுத்தாமல் தவறவிடப்பட்ட கடன்களை அறவிடும் வகையில் அந்தக் கடனுக்கு பிணைப் பொறுப் பாக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஏதேனும் ஆதனத்தை பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை செய் வதற்கு வங்கிகளால் எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்வதற்கான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் (பராட்டே சட்டம்) டிசெம்பர் 15 ஆம் திகதி வரை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ த சில்வா தலைமையில் கூடிய போதே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

இதன்போது நிதி அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்ட அதிகாரிகள் குறிப்பிடு கையில், கடன் பெறுநர்களுக்கு தற்காலிகமான நிவாரணமொன்றை வழங்க இதன்மூலம் எதிர்பார்ப்ப தாக தெரிவித்தனர்.

இதற்கமைய டிசெம்பர் 15 இன் பின்னர் இது தொடர்பில் எந்த நட வடிக்கைகள் எடுக்கப்படும் என குழு வினவியது. கலந்துகொண்ட அதிகாரிகள் இது தொடர்பில் தெளிவான பதிலை வழங்கத் தவறி யதால் டிசெம்பர் 15 இன் பின்ன ரான காலப்பகுதியில் பராட்டே சட்டத்தின் கீழ் வருபவர்கள் தொடர் பில் எடுக்கும் நடவடிக்கை தொடர் பில் வழிகாட்டலை வழங்குமாறு குழு பரிந்துரை வழங்கியது.

அத்துடன், பராட்டே சட்டத் தின் கீழ் வங்கிகளுடன் கொடுக்கல் - வாங்கல் செய்துகொண்டுள்ள அனைத்துத் தரப்பினருக்கும் வங்கிகளுடன் கலந்துரையாடுவதற்கு நியாயமான சந்தர்ப்பம் வழங்குமாறும் குழு இதன்போது பரிந்துரை வழங்கியது. (எ)

# சரத் பொன்சேகாவுக்கு முக்கியத்துவம் இல்லை

## ஐக்கிய மக்கள் சக்தி



கொழும்பு, மே 03

ஐக்கிய மக்கள் சக்தி மே தினக் கூட்டத்தை ஏற்பாடு செய்ததில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எந்தப் பங்கையும் வகிக்கவில்லை. எனவே அவருக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை என்று அதன் உப தலைவர் சுஜீவ சேனசிங்க தெரிவித்தார்.

பொன்சேகா ஐக்கிய மக்கள் சக்தியை விமர்சித்துள்ளார். அதுவே மே தினக் கூட்டத்தில் அவருக்கு உரையாற்ற வாய்ப்பு வழங்கப்படாததற்கு மற்றொரு காரணம்.

மே தினப் பேரணியை நடத்த உதவியவர்களுக்கு மட்டுமே உரையாற்ற சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் உங்களுக்கு என்ன பிரச்னை என்று நான் பொன்சேகாவிடம் கேட்டேன். கட்சியின் அரசியல் நடைமுறைகளை தான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அவர் என்னிடம் கூறினார்.

வாக்குகளை ஈர்ப்பதற்காக மரணச் சடங்குகள் மற்றும் பிற நிகழ்ச்சிகளுக்கு செல்வது தனக்குப் பிடிக்காது என்று பொன்சேகா என்னிடம் கூறினார். அவ்வாறு கட்சியை விமர்சித்தால் அவர் எதற்கும் தகுதியற்றவர்.- என்றார்.

மே தினக் கூட்டத்தில் பொன்சேகா பங்கேற்காமை குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு சுஜீவ சேனசிங்க மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார். (அ-எ)

# எலிக் காய்ச்சல் பரவும் அபாய இடமாக கம்பஹா!

கொழும்பு, மே 03

கம்பஹா மாவட்டத்தில் எலிக் காய்ச்சல் பரவும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மாதெல்கமுவ, நெதகமுவ , பத்தடுவன, நில்பனாகொட , உடுகம்பொல, மெதகம்பிட்டி , வெகொவ்வ, மாரபொல , யட்டியன , வீதியவத்த , அஸ்கிரிய மற்றும் கல்லொழுவ ஆகிய பிரதேசங்கள் எலிக் காய்ச்சல் பரவும் அபாயமிக்க இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசங்களில் கடந்த ஆண்டில் அதிக எண்ணிக்கையிலான எலிக் காய்ச்சல் நோயாளர்கள் பதிவாகியிருந்தனர். இந்நிலையில், இந்த வருடத்தின் முதல் நான்கு மாத காலப்பகுதியில் மாத்திரம் 17 எலிக் காய்ச்சல் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதில் இருவர் மரணமடைந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வீசா வழங்கும் செயல்பாடு இந்திய நிறுவனத்தின் வசம்

## விமான நிலையத்தில் பெரும் குழப்பம்

கொழும்பு, மே 03

கட்டுநாயக்கா விமான நிலையத் தில் வீசா வழங்கும் செயல்பாடு களை இந்திய நிறுவனமொன்று சர்ச்சைக்குரிய விதத்தில் பொறுப் பேற்றுள்ளதைத் தொடர்ந்து விமான நிலையத்தில் பெரும் குழப் பம் ஏற்பட்டது.

இலங்கையின் குடிவரவு குடிய கல்வு திணைக்களம் வீசா வழங்கும் நடவடிக்கைகளை பல வருடங்களாக சுமூகமான முறையில் முன்னெடுத்து வந்த நிலையில் புதிய நிறுவனம் மேலதிகமாக 25 டொலர்களை அறவிட்டுள்ளது.

அமைச்சரவையின் அனுமதி யின்றி இந்திய நிறுவனத்திடம் இலங்கைக்கு வருபவர்களுக்கு வீசா வழங்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள கொழும்பு ஊடகம் ஒன்று, எந்த அமைச்சர் எந்த அதிகாரி இதற்கு அனுமதி வழங்கினார் என்ற கேள்வி எழுந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

வழமையான 75 டொலருக்கு அப்பால் இந்திய நிறுவனம் மேல திகமாக 25 டொலர்களை அறிவிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விமான நிலையத்தில் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருப்பதை ஸ்ரீயும் இலங்கையைச் சேர்ந்த ஒருவர் தனது மனைவியின் வீசா இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இதற்கு இந் திய அதிகாரிகளே காரணம் என குற்றஞ்சாட்டுவதையும் காண்பிக் கும் வீடியோக்கள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன. எனது மற்றும் எனது மனைவியின் வீசா குறித்து எப்படி இந்தியப் பிரஜைகள் தீர்மானிக்க முடியும். இது இலங்கை பிரஜை என்ற அடிப்படையில் எனக்குள்ள உரிமை.

எனக்கு வீசா குறித்து தீர்மானிப் பதற்கான உரிமையுள்ளது. நான் வரி செலுத்துகின்றேன். வருடாந் தம் 4 மில்லியன் இலங்கை ரூபாயை செலுத்துகின்றேன் என அவர் கோபத்துடன் தெரிவிப்பதை காண் பிக்கும் வீடியோக்கள் சமூக ஊட கங்களில் வெளியாகியுள்ளன. (அ- எ)

# கட்டுநாயக்கா விவகாரத்தில் இந்தியாவை தொடர்புபடுத்தல் அடிப்படை ஆதாரமற்றது

## இந்தியத் தூதரகம் மறுப்பு

கொழும்பு, மே 03

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வீசா வழங்கும் நடைமுறையை இந்திய நிறுவனங்கள் பொறுப்பேற்றமை தொடர்பில் ஊடகங்களால் முன்வைக்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்து இலங்கைக்கான இந்தியத் தூதரக ஊடகப் பேச்சாளரால் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.அதில் இந்த விவகாரத்தில் இந்தியாவைத் தொடர்பு படுத்துவது அடிப்படை ஆதாரமற்றது என்று மறுத்துள்ளது.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வீசா வழங்கும் நடைமுறையை இந்திய நிறுவனங்கள் பொறுப்பேற்றமை குறித்து சமூக ஊடகங்கள் உட்பட பல்வேறு ஊடகங்களில் வெளியாகியுள்ள அறிக்கைகள் மற்றும் கருத்துக்கள் தொடர்பாக நாம் அறிந்துள்ளோம்.

இந்த அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிறுவனங்கள் இந்தியாவைத் தளமாகக்கொண்டு இயங்கும் நிறுவனங்களோ அல்லது இந்திய நிறுவனங்களோ அல்ல, மாறாக வேறு இடங்களைத் தலைமையகமாகக் கொண்டவையாகும். இவ்வாறான சூழலில் இந்தியாவைத் தொடர்பு படுத்துவது அடிப்படை ஆதாரமற்றதாகும் என்று இந்தியத் தூதரகம் மறுத்துள்ளது. (எ)

# எரிவாயு விலையில் மாற்றம்

கொழும்பு, மே 03

சமையல் எரிவாயுவின் விலையைக் குறைக்கத் தீர்மானித்துள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

குறைக்கப்படும் விலைகள் தொடர்பில் இன்று அறிவிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்படி குறைக்கப்பட்ட விலை இன்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் தொடுக்கப்பட்ட

# 130 தமிழ் மக்களுக்கு எதிரான வழக்கை ஜூலைக்கு தவணையிட்டது நீதிமன்று

முல்லைத்தீவு, மே 03

முல்லைத்தீவில் கரியல்வயல் சுண்டிக்குளம் பகுதிகளை அண்மித்துள்ள தமிழ் மக்களில் 130 பேருக்கு எதிராக வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் தொடுக்கப்பட்ட வழக்கு நேற்றையதினம் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்நிலையில் ஜூலை மாதம் 3 நாட்களுக்கு இந்த வழக்கு தவணையிடப்பட்டுள்ளது

1908 ஆம் ஆண்டு தொடக்கம் மக்கள் பயிர் செய்து வாழ்ந்துவரும் நிலையில் குறித்த இடத்திலுள்ள மக்கள் தம் காணிகளைத் துப்புரவு செய்தமையை அடுத்து வனஜீவராசிகள் திணைக்களத்தினர் அது தமக்குரிய காணி என முல்லைத்தீவு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தனர்.

சுண்டிக்குளம் தேசிய பூங்காவுக்குள் உட்சென்றமை, மரங்களை வெட்டி அகற்றியமை, பாதைகளை அமைத்தல் மற்றும் பாதைகளைப் பயன்படுத்தியமை போன்ற காரணங்களை முன்வைத்து குறித்த வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கானது கடந்த வருடம் 7. 12. 2023 அன்றையதினம் இடம்பெற்று 02. 05. 2024 வழக்குத் தவணையிடப்பட்டிருந்தது. இதற்கமைய நேற்றைய தினம் குறித்த வழக்கானது விசாரணைக்காக முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கை எதிர்கொண்ட மக்கள் சார்பில் சட்டத்தரணி சி. தனஞ்சயன் முன்னிலையாகினார். இது தொடர்பில் வழக்கின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது,

புதுக்குடியிருப்பு பகுதியில் இருக்கின்ற கரியல்வயல் பிரதேசத்திலே வாழும் 100 இற்கு மேற்பட்ட மக்களின் காணிகள் வனஜீவவராசிகள் திணைக்களத்துக்கு கீழே வருகின்ற காணிகள் என வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் தொடரப்பட்ட வழக்குகள் இரண்டாம் தவணையாக எடுத்துக்கொள்ளப்பட்டன.

இந்த வழக்கிலே சம்பந்தப்பட்ட மக்கள் ஏற்கனவே தனியார் காணிகளுக்கான நூற்றாண்டு உறுதி வழங்கப்பட்ட மக்களும், தனியார் காணிகளுக்குச் சொந்தமான மக்களும் அரச அனுமதிப் பத்திரம் பெற்ற மக்கள் என நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு எதிராகவே இந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் இருக்கும் குறைபாடுகளை ஏற்கனவே நாம் சுட்டிகாட்டியிருந்தோம். அதேபோன்று இன்றைய தினமும் இந்த வழக்கில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியிருந்தோம்.

இந்த வழக்குத் தொடர்பில் மீள் பரிசீலனை செய்து இவ் வழக்குகள் குறித்து குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டியிருப்பின் தாக்கல் செய்யுமாறும் நீதிமன்றத்தால் வழக்குத் தொடுநர் தரப்புக்கு அறிவுறுத்தப்பட்டு குறித்த வழக்கானது மூன்றாகப் பிரித்து எதிர்வரும் ஜூலை மாதம் 19 ஆம் திகதி, 25 ஆம் திகதி, 26 ஆம் திகதிகளுக்கும் தவணையிடப்பட்டுள்ளது. (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.05.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org